Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 75 | புதன்கிழமை 09 பெப்ரவரி 2022 | தை 27 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 1,253
மொத்தம் 6,21,985

**உயிரிழப்பு**
நேற்று 35
மொத்தம் 15,656

# இருநாட்டு உறவை பாதிக்காமல் மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு!

## மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது அரசு

**கொழும்பு, பெப்ரவரி 09**
**மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இலங்கையும்- இந்தியாவும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றன. இரு நாடுகளின் நட்புறவில் எந்தத் தாக்கமும் ஏற்படாத வகையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கின்றோம். அவ்வப் போது இந்தப் பிரச்சினை எழுவது வழமை. சில தரப்புகள் இதன்போது உணர்வுபூர்வமாகச் செயற்படலாம்.**

15 ➤

## கோப் குழுவுக்கு உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, பெப்.9
இலங்கை நாடாளுமன்றக் கட்டமைப்பில் மிக முக்கிய மான குழு வாகக் கருதப்

15 ➤

## கோபாவுக்கும் உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, பெப்.9
அரச கணக்குகள் பற்றிய குழுவுக்கும் (கோபா குழு) நேற்று உறுப் பினர்கள் பெய

15 ➤

### யாழ்ப்பாணத்தில்-

## எகிறுகிறது கொரோனா!

### மாவட்டச் செயலர் அபாய அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வருகின்றது. இது ஆரோக்கியமானது அல்ல. சுகாதார அமைச்சு வெளியிட் டுள்ள சுகாதார வழிகாட்டல்

15 ➤

### அனுமதி வழங்கப்பட்டால்

## இந்தியப் பக்தர்களும் கச்சதீவுக்கு வரலாம்!

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9
கச்சதீவுத் திருவிழாவுக்கு இந்தி யப் பக்தர்களை அனுமதிப்பது தொடர்பான கோரிக்கையை நாம் உரிய தரப்புக்கு அனுப் பியுள்ளோம். அதற்கு அனுமதி வழங்கப்பட்டால் இந்தியாவில்

15 ➤

## மினிபஸ்ஸுடன் மோதி அல்வாய் இளைஞர் சாவு!

### ஆரியகுளத்தருகே சம்பவம்



யாழ்ப்பாணம், பெப்.9
யாழ்ப்பாணம், ஆரியகுளத்துக்கு அருகே நேற்று அதிகாலை நடந்த விபத்தில் பருத்தித்துறை, அல்

15 ➤

## தமிழக மீனவர் படகுகள் யாழில் நேற்றும் ஏலம்!

யாழ்ப்பாணம், பெப்.9
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட மைக்காக தமிழக மீனவர்களி டம் இருந்து பறி முதல் செய்யப்

15 ➤

## எல்லைதாண்டி மீன்பிடித்த தமிழக மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், பெப்.9
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச் சாட்டில் தமிழக மீனவர்கள் 11 பேர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன் தினம் இரவு

15 ➤



### சுகாதாரத் துறையினரின்

## போராட்டம் தொடர்கிறது!

### நேற்று நடந்த பேச்சு தோல்வி

கொழும்பு, பெப்.9
சுகாதாரத்துறைத் தொழிற்சங் கங்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. சுகா

15 ➤

## ஓய்வூதியருக்கு 5,000 ரூபா

கொழும்பு, பெப்.9
நிதி அமைச்சால் அறிவிக்கப் பட்ட அரச ஊழி யர்கள் மற்

15 ➤

## மருந்துகளுக்கும் கடும் தட்டுப்பாடு!

### ஒப்புக்கொண்டது அரசாங்கம்


கொழும்பு, பெப்.9
நாட்டில் அத்தியாவசிய மருந் துப் பொருள் களுக்குத் கடும்

15 ➤

## இந்தியா நினைத்தால் இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தலாம்!

யாழ்ப்பாணம், பெப்.9
இலங்கை – இந்திய ஒப்பந் தத்தில் உறுதி செய்யப்பட்ட தமிழர் தாயகத்தை அழிக்கின் றது என்ற அடிப்படையில் இந்தி யாவால் இலங்கையை சர்வ தேச நீதிமன்றில் நிறுத்த முடி யும் என்று நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திர குமாரன் தெரிவித்தார்.

விரிவு = பக்.10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களைத் தூண்டி உறவைப் பிரிக்க சதி

## சீமான் சீற்றம்



சென்னை, பெப். 9

**தமிழக மீனவர்களுக்கும், ஈழத்து மீனவர்களுக்கும் இடையே பகைமையை ஏற்படுத்தி, ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளான இருந்த தமிழ் இனத்தை, சிங்கள இனவாதம் பிரிக்க சதி செய்கின்றது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பான அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழப்பெருநிலத்தில் 2லட்சம் தமிழர்களைக் கொன்றொழித்து, ஒரு இனப்படுகொலையை நிகழ்த்தி, 800க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை நடுக்கடலிலே படுகொலை செய்தும், இன்னும் வன்மம் தீராது, தமிழர்களுக்குள்ளேயே பகைமூட்டும் சிங்கள இனவாத ஆட்சியாளர்களின் போக்குகள் கடும் கண்டனத்துக்குரியன.

தமிழக மீனவர்கள் தொப்புள்கொடி உறவுகளான ஈழத்துச்சொந்தங்களை ஒருநாளும் பகையாளியாகக் கருதவோ, தாக்குதல் தொடுத்திடவோ மாட்டார்கள். அதேநேரத்தில் ஈழத்து மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்குமிடையே சண்டை மூட்டிவிட்டு, வேடிக்கை பார்க்கும் சிங்கள அதிகாரவர்க்கத்தின் செயல்களுக்குப் பலியாகாது விழிப்போடும், தெளிவோடும் இருக்கவேண்டும்.

தமிழகத்து மீனவர்கள்தான் ஈழ மீனவர்களைத் தாக்கிக் கொன்றுவிட்டார்கள் என்று பரப்புரை செய்வது, தமிழகத்து மீனவர்களது படகுகளை ஈழத்து மீனவர்களுக்கு ஏலத்தில் விற்று, காழ்ப்புணர்வை தமிழக மீனவர்களிடம் உருவாக்க முயல்வதும் பெரும் மோசடித்தனமானது.

ஈழத்தாயகம் எப்போதெல்லாம் தாக்குதலுக்கு உள்ளாகின்றதோ அப்போதெல்லாம் தமிழகம் கொதித்தெழுந்து தங்கள் உறவுகளைக் காக்க உணர்வோடு வீதிக்கு வந்திருக்கின்றது. ஆகவே, தமிழகத்துக்கும், ஈழத்துக்குமான தொப்புள்கொடி உறவை, வரலாற்று வழித்தொடர்பை எவராலும் மறுக்க முடியாது - என்றுள்ளது. (ம-4-26)

# மக்கள் விழிக்காவிடில் மன்னார் அழிந்துவிடும்

## கடற்றொழில் அமைப்பு எச்சரிக்கை

மன்னார், பெப். 9

மன்னார் மாவட்டம் அரசாலும், வெளிநாட்டின் நிறுவனங்களாலும் அழிவை நோக்கிச் செல்கின்றது. இது தொடர்பில் மக்கள் விழிப்புணர்வு கொள்ளாவிடில், மாவட்டத்தை மீட்பது கடினம்.

இவ்வாறு மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் முகமட் ஆலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறலால், வடபகுதி கடல்வளம் அழிந்து செல்கின்றது. ஆனால் அரசோ நாட்டை வெளிநாடுகளுக்கு அடகு வைப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றது.

மன்னார் வளங்கள் வேறு நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் வேறு நாடுகளின் நிறுவனங்கள் எமது மன்னாரை கையடக்குவதற்கான முயற்சியில் அலைந்து திரிகின்றன. நாங்கள் சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று அறைகூவல் விடுத்தாலும், மாவட்ட மக்களோ அல்லது இந்த நாடோ இன்னும் முழுமையாக சுதந்திரம் பெறாத நிலையே காணப்படுகின்றது.

இதை இந்த நாட்டின் அரசானது உணர்ந்து கொள்ள வேண்டும். எமது நாட்டின் வளத்தையும், உயிர்களையும் தொடர்ந்து காவு கொள்ளாதிருக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது - என்றார். (ம-4-60)

### தமிழ் சைவப் பாடசாலைக்கு

# ஹபாயா அணிந்து வந்தமைக்கு சைவ மகாசபை கடும் கண்டனம்

திருகோணமலை, பெப். 9

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் தாக்கப்பட்டமை, குறித்த பாடசாலைக்கு ஹபாயாவுடன் இஸ்லாமிய ஆசிரியை கடமையேற்கச் சென்றமைக்கு சைவ மகாசபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

சைவ வித்யா விருத்திச் சங்கம், இந்துக் கல்லூரிகள் சபை ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும்போது சைவ சமயத்தவர்களின் தனித்துவம் அங்கு மீறப்படாது என்றும் வேறு மதப் புகுத்தல்கள் அனுமதிக்கப்படாது என்றும் உறுதிமொழி பெற்றுக்கொள்ளப்பட்டே வழங்கப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள சைவ மகாசபை தமிழ்ச் சைவப் பாடசாலைகளுக்கு உள்ள உரிமையை விட்டுக் கொடுக்கமுடியாது என்றும் தெரிவித்துள்ளது. (வ-125)

# ஏக்கர் வரி அறவீடு

சாவகச்சேரி, பெப். 9

கைதடி நாவற்குழி கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கான 2022ஆம் ஆண்டுக்குரிய ஏக்கர் வரி, சந்தாப் பணம் அறவீடுகள் கைதடி நாவற்குழி சிறிமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை இடம்பெறும்.

அமைப்புக்குட்பட்ட விவசாயிகள் கடந்த வருடம் செலுத்திய ஏக்கர் வரி, சந்தாப் பணம் ஆகியவற்றின் பற்றுச்சீட்டுக்களுடன் வருகை தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வ-9)

# ஹெரோய்னுடன் பெண் கைது

களுபோவில பிரதேசத்தில் பெருந்தொகை ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவரிடம் இருந்து 1 கிலோ 64 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (வ-இ)

# திண்மக்கழிவகற்றும் திட்டம்: ரூபா 5 லட்சம் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 9

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வினைத்திறனான முறையில்திண்மக்கழிவுகளைச் சேகரித்து அதனை தரம்பிரித்து சேதனப்பசளை உருவாக்கும் செயற்றிட்டத்துக்காக ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வலி தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவித்தார்.

கல்லுண்டாய் வெளியில், திண்மக்கழிவகற்றல் நிலையத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில், திண்மக்கழிவுகளை முறைப்படி திரட்ட 400 வீடுகளுக்கு குப்பைத் தொட்டிகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக, மானிப்பாய் கிழக்கு ஜே/138 கிராம அலுவலர் பிரிவில் 100 கிலோகிராம் திண்மக்கழிவு களைச் சேகரிக்கக் கூடிய வகையில் 100 குடும்பங்களுக்கு குப்பைத் தொட்டிகள் வழங்கப்படவுள்ளன என்றார். (வ-125)

### சண்முகா பாடசாலை விவகாரம்

# தமிழர், முஸ்லிம்களை பிரிப்பதற்கு சதிமுயற்சி

## யாழ். முஸ்லிம் இளைஞர் கழகம் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 9

திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியில் முஸ்லிம் ஆசிரியை மீது நிகழ்த்தப்பட்ட சம்பவம், ஒரு சில அரசியல் பிரதிநிதிகளால், தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரிக்கும் சதிமுயற்சி என்று யாழ்ப்பாணம் முஸ்லிம் இளைஞர் கழகம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.முஸ்லிம் இளைஞர் கழகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எந்தத் தீய மற்றும் அரசியல் சதி முயற்சிகளும் தமிழ் பேசும் மக்களை பிரிக்க முடியாது. இவ்வாறான சதி முயற்சிகளை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இனியும் மேற்கொள்ள நினைப்போர், தமது முயற்சிகளை கைவிட வேண்டும்.

எனவே இனியும் தாமதிக்காமல் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து சதிகாரர்களின் முயற்சிகளைத் தோற்கடித்து, தமிழ் பேசும் மக்களின் ஒன்றித்த முன்னோக்கிய பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம் என்று பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றோம் -என்றுள்ளது. (ம-4-இ)

# கல்லுண்டாய்வெளி விரைவில் நகரமயமாகும்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நம்பிக்கை!

யாழ்ப்பாணம், பெப். 9

தரிசு நிலமாகக் காணப்பட்ட கல்லுண்டாய் வெளி, எதிர்காலத்தில் கேந்திர மையமாக மாறுவதற்கு சாத்தியக் கூறுகள் எழுந்துள்ளன என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் யசோதா உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கல்லுண்டாய் வெளியில், திண்மக்கழிவகற்றல் நிலையத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆரம்ப காலங்களில் கல்லுண்டாய்வெளி குப்பை மேடாகக் காட்சியளித்தது. தற்போது இங்கு திண்மக்கழி வகற்றல் நிலையத்தை சிறப்பாக முன்னெடுத்து, சேதனப் பசளை தயாரிக்கப்படுகின்றது. இயற்கை நிறைந்த சூழலோடு மரக்கன்றுகள் மற்றும் முறையான திட்டமிடல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தரிசு நிலமாகக் காணப்படும் பகுதியில் குடியிருப்புக்களை அமைப்பதற்கு கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. விரைவில் செஞ்சிலுவைச் சங்கத்தின் காரியாலயம் இங்கு அமைக்கப்படும். அரச அலுவலகங்களும் தமக்கு இங்கு நிலங்களை தந்துதவுமாறு கோரிக்கைகளை விடுத்துள்ளன. மேலும் பொலிஸ் நிலையப் பிரிவும் இங்கு ஆரம்பிக்கப்படும்- என்றார். (ம-4-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலையை நிறுவ மக்கள் கடும் எதிர்ப்பு

## நிறுவனத்துக்கு எடுத்துரைப்பு

**மன்னார், பெப். 9**

**மன்னார், நானாட்டான் பிரதேச செயலகத்துக்குரிய கிராமங்களில் மின் காற்றாடிகளை அமைப்பதற்கு மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் என்று மன்னார் பிரஜைகள் குழு, குறித்த நிறுவனத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.**



மன்னார் தீவில் நடுக்குடா மற்றும் பேசாலையில் தலா 3 விசிறி களைக் கொண்ட 36 மின் காற்றாடிகள் அமைக்கப் பட்டுள்ளன.

பல்வேறு காரணங்களால் இந்தக் காற்றாலைகள் வேண்டாம் என்று மக்கள் கருதுகின்றனர்.

அவர்கள் இந்தக் காற்றாலைகளின் அமைவிடம் தொடர்பில் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது மன்னார்த் தீவின் தென் மேற்குக் கடற்கரையை அண்டிய அச்சங்குளம், நறுவிலிக்குளம் மாதிரிக் கிராமம், உமனகரி மற்றும் பாசிக்குளம், நானாட்டான் ஆகிய பகுதிகளிலும் காற்றாலை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அரசிடம் அனுமதி பெற்றுள்ள நிறுவனத்தினர், மன்னார் பிரஜைகள் குழு மற்றும் ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது மக்களின் எதிர்ப்பை பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர். (ம-4,60)


# வீட்டில் சூட்சுமமாக கசிப்புக் காய்ச்சல்

## சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், பெப். 9

வீடொன்றில் சூட்சுமமாக கசிப்புக் காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப் பட்டுள்ளார்.

சுழிபுரம், காட்டுப்புலத்தில் கசிப்புக் காய்ச்சப்படுகின்றது என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலை அடுத்து, சந்தேகநபரின் வீடு முற்றுகையிடப்பட்டது. அதன்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அங்கிருந்து 35 லீற்றர் கசிப்பு, 110 லீற்றர் கோடா மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,23)



பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக்கோரி, பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தினர், கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கோரியும் விலைவாசியைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தியும் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். (ம-4,113)

# இதயப் பெருநாடி கிழிந்தவருக்கு உயிர்கொடுத்தனர் மருத்துவர்கள்

வவுனியா, பெப். 9

கத்திக் குத்துக்கு இலக்காகி இதயப் பெருநாடி கிழிந்த இளைஞர் ஒருவர், மருத்துவக் குழுவினரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

ஓமந்தை - பாலமோட்டையைச் சேர்ந்த இளைஞர் தனிப்பட்ட தகராறு காரணமாக பலமுறை கத்தியால் குத்தப்பட்டிருந்தார்.

அதீத குருதிப்போக்கால் மயக்கமுற்ற நிலையிலும், குடல் வெளித்தள்ளிய நிலையிலும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் கடந்த முதலாம் திகதி அவர் சேர்க்கப்பட்டார்.



வயிற்றினுள் தொடர்ந்த குருதிப் பெருக்காலும், சுவாசப்பை மற்றும் சுவாசக் குழாய்கள் கிழிந்தமையால் ஏற்பட்ட நெஞ்சறை காற்று கசிவினாலும், மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த அவரின் உயிரை, அவசர சிகிச்சை குழாமினர் கடும் முயற்சியால் பாதுகாத்தனர்.

தொடர்ந்து அறுவைச் சிகிச்சைக் குழுவினரால் இருபக்க நெஞ்சினுள்ளும் துளையிடப்பட்டு குழாய்கள் அனுப்பப்பட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மேல் வயிற்றில் பாய்ந்த கத்தி இரைப்பையை துளைத்துச்சென்று கணையச் சுரப்பியைக் கிழித்துக் கொண்டு மண்ணீரல் நாடியையும், இதயப் பெருநாடியையும் கிழித்திருந்து.

குருதி பீறிட்டு பாய்ந்து கொண்டிருந்தது. விரைந்து செயற்பட்ட அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் நுணுக்கமான முறையில் குருதி நாடிகளை சரிசெய்து குருதிப்பெருக்கை கட்டுப்படுத்தினர். அதன்பின்னர், குடலிலும் இரைப்பையிலும் ஏற்படுத்தப்பட்ட துளைகளும் சரிசெய்யப்பட்டன. தற்போது அவர் உடல் நலம் தேறிவருகின்றார். (ம-46)




கிட்டடியில இடமாற்றுப் பிரச்சினை பற்றி பட்சி சொன்னதெல்லோ. தாங்கள் இப்ப வேலை செய்யிற ஒப்பீஸில இருந்து அதுக்கு கிட்ட இருக்கிற இன்னொரு ஒப்பீஸுக்குப் போகவே கனபேர் பஞ்சிப்படுகினமெண்டும் அதில பட்சி சொல்லியிருந்தது. அதில சொல்லாமல் விட்ட ஒரு விசயத்தை இப்ப சொல்லோனும்.

யாழ்ப்பாணத்தில சாரதிமாருக்கும் இந்த வருசம் இடமாற்றம் வந்தது. ஆனால் அவை புது ஒப்பீஸில போய், டியூட்டில சேருறதுக்கு முதல் ஒரு கடிதத்தை கச்சேரிப் பெரியவர் எல்லா பிரதேச செயலகங்களுக்கும் அவசரமா அனுப்பி வைச்சார். எல்லாச் சாரதிகளின்ர இடமாற்றத்தையும் நிப்பாட்டி வைச்சிருக்கெண்டு அந்தக் கடிதம் மூலமா அறிவிக்கப்பட்டிருந்திச்சு.

இப்பிடி "இருக்கு ஆனால் இல்லை" எண்ட மாதிரி இடமாற்றக் குழப்பம் வாறதுக்கு காரணம், கனவு பாழான எம்.பி குரூப்தானாம். இப்பிடி முதல் ஒரு கடிதத்தில இடமாற்றம் எண்டும், பிறகு திடீரெண்டு இடமாற்றம் இல்லை எண்டும் மாறி மாறி கடிதம் அனுப்ப, பிரதேச செயலர்மார் மட்டத்தில பெரும் குழப்பமாம். ஒராள், ரண்டு பேருக்கு இடமாற்றத்தை நிப்பாட்டினால் அதில ஒரு நியாயம் இருக்கு. ஏனெண்டால் அப்பிடி ஒரு சிலருக்கு தவிர்க்க முடியாத சில காரணங்களால, வேற ஒப்பீஸுக்கு இப்போதைக்கு வேலைக்குப் போகமுடியாது. ஆனால், எல்லாருக்கும் கூண்டோட இடமாற்றத்தை நிப்பாட்டுகினம் எண்டால், பிறகு ஏன் வேலை மினக்கெட்டு, ஒவ்வொரு வருசமும் இடமாற்ற விண்ணப்பம் அனுப்பி, அதை நிரப்பி, பிறகு அதை வைச்சு ஒரு லிஸ்ட் ரெடி பண்ணி, இடமாற்றக் குழுக்கூட்டம் போட்டு ஆராய்ஞ்சு, கடைசியா இறுதிப்பட்டியல் தயாரிச்சு, அதை அந்தந்த ஒப்பீஸுக்கு அனுப்பி நேரத்தையும், ஆக்களின்ர வலுவையும் வீணாக்க வேணும்? எண்டு விசயம் தெரிஞ்சவை கேக்கினம்.

இப்பிடி ஒவ்வொருத்தரும் தாங்கள் நினைச்ச அலுவலகத்திலதான் வேலை செய்வினம் எண்டால், அதுக்கு ஏத்தமாதிரி மேலதிகாரிமாரும் தாளம் போடுவினம் எண்டால், பேசாமல் எல்லாரையும் அவையவை விரும்பின இடங்களுக்கு போகலாம் எண்டு 'ஒப்பின் விஸா' குடுக்கலாம் போல. ஒரு நிர்வாகம் எண்டால் சில ஒழுங்குகள்,கட்டுப்பாடுகள் முக்கியம். அப்பதான் நிர்வாகம் ஒழுங்கா நடக்கும். இது அரசியல்வாதிகளிட்ட சாரதிகள் போய் முறையிட, அவை கச்சேரி பெரியவருக்கு 'வைன்'குடுக்க, இவர் வைன் குடுத்த பொம்மை மாதிரி அதுக் கேத்தபடி ஆட, ஒரே பொம்மலாட்டம்தான் நடக்குது யாழ்ப்பாணத்தில. கனபேர் என்ன கதைக்கினம் எண்டால் கச்சேரிப் பெரியவருக்கு பதிலா, கனவு பாழாப்போன எம்.பியோ இல்லாட்டி அவரின்ர சித்தப்பாவோ, மச்சானோ அந்தக் கதிரையில இருக்கிறதுதான் பொருத்தம் எண்டுகினம். ஏனெண்டால் அவை சொன்னபடிதானே எல்லாம் நடக்குது. இன்னொராளை வைச்சு ஆட்டுவிக்கிறதுக்குப் பதிலா அவையே அந்தக் கதிரையில இருந்திட்டினம் எண்டால், நேரம் மிச்ச மெல்லோ? பட்சி சொல்றது சரிதானே??



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுவில் மணலகழ்வு பொலிஸார் அசண்டையீனம்

## கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ஜீவராசா விசனம்

**கிளிநொச்சி, பெப். 9**

**இரணைமடுவில் தினம்தினம் பெருந்தொகை மணல் அகழ்ந்து செல்லப்படுகின்றது. இந்த விடயத்தில் பொலிஸார் அசமந்தத்துடன் செயற்படுகின்றனர். மதுபான கடத்தல்களை முறியடிப்பதைப்போன்று மணல் கடத்தலையும் முறியடிக்க வேண்டும்**




இவ்வாறு கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ஜீவராசா வலியுறுத்தியுள்ளார். கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சியின் மிக முக்கியமான குளமாகவும், விவசாயக்குளமாகவும் இரணைமடு உள்ளது. அங்கு அதிகளவான மணல் அகழ்வு இடம்பெறுகின்றது.

கனரக வாகனங்களைக்கொண்டு பல கியூப் மணல் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றன. இதைத் தடுக்கப் பொலிஸார் முனைப்புக் காட்டுவதாகத் தெரியவில்லை. மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தாமையானது குளத்தை அழிப்பதற்கான திட்டமாக இருக்குமோ என்றும் சந்தேகம் எழுகின்றது. இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி, இராணுவத்தினர் ஊடாக மணல் அகழ்வைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (வ-113)

## மாணவன் மீது தாக்குதல்: பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் நான்காம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் கடந்த வாரம் பல்கலைக்கழகத்தில் தனது நண்பர்களுடன் இருந்த வேளை, இரண்டாம் வருட மாணவர் ஒருவர் பல்கலைக்கழக மாணவர் சாராத ஒருவரோடு அரைக்காற்சட்டையுடன் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்துள்ளார். அதனால் நான்காம் வருட மாணவர் ஒருவரும், ஏனைய மாணவர்களும் அவர்களை வழிமறித்து திரும்பிச் செல்லுமாறு கூறினர். அவ்விடத்துக்கு பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் வருகை தந்து இருவரையும் வெளியேறுமாறு பணித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த மாணவனும், பல்கலைக்கழகம் சாராத மற்றைய இளைஞரும் வெளியில் சென்று தங்களை வழிமறித்த மாணவர்களோடு முரண்பட்டுள்ளனர்.

அதன்பின்னர் குறித்த நான்காம் வருட மாணவர் மூன்றாம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரின் முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தி, கல்லுண்டாய் ஊடாக காரைநகர் நோக்கிப் பயணித்துள்ளார். அப்போது கல்லுண்டாயில், 4 மோட்டார் சைக்கிள்களில் வந்த 8 பேர் குறித்த முச்சக்கர வண்டியை வழிமறித்தனர். மாணவருடன் முரண்பட்டுள்ளனர். குறித்த முச்சக்கர வண்டியை மேலும் சிலர் பின்தொடர்ந்து வந்து, மாணவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். மாணவர் மீது தாக்குதலும் நடத்தினர்.

இதனையடுத்து பல்கலைக்கழக மாணவர்களால், பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரியிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்ட நிலையில், மாணவர்களால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-4,125)

## கள் உற்பத்தியாளர்களுக்கு கள் சேகரிப்புக் கொள்கலன்

சாவகச்சேரி, பெப். 9

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி திணைக்களத்தின் சௌபாக்கியாத் திட்டத்தின், பன்னவேலை உற்பத்திக் கிராமத்தின் கள் உற்பத்தியாளர்களுக்கு கள் சேகரிப்பு கொள்கலன்கள் வழங்கப்படவுள்ளன.

வரணி வடக்குப் பிரிவைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு வழங்கவென 200 லீற்றர் கொள்ளளவு கொண்ட கொள்கலன்கள் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை பயனாளர்களுக்கு வழங்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

## தொழில் முயற்சியாளர்களுக்கு விதாதா திட்டத்தால் உதவிகள்

சாவகச்சேரி, பெப். 9

தென்மராட்சிப் பகுதியில் சிறுகைத்தொழிலில் ஈடுபடும் 72 தொழில் முயற்சியாளர்களின் தொழில் மேம்பாட்டுக்கு விதாதா திட்டத்தின் கீழ் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

கிராமிய கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் 2021ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த உபகரணங்களும், இயந்திரங்களும் பிரதேச விதாதா வளநிலையத்தால் வழங்கப்படுகின்றன.

அதன்படி தேங்காய் எண்ணெய் உற்பத்தி இயந்திரம், ஒட்டு உபகரணங்கள், மரவள்ளிக்கிழங்கு சீவும் இயந்திரம், உளுந்து அரைக்கும் இயந்திரம், பன்னவேலை உற்பத்தியாளர்களுக்கு தையல் இயந்திரம், உற்பத்திப் பொருள்கள், பாதுகாப்பு அலுமாரிகள் மற்றும் தும்பு உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி இயந்திரங்கள் ஆகியவை வழங்கி வைக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)



## சிவாஜி, ரவிகரன் மீதான வழக்கு விசாரணை அமர்வு ஜூலையில்!

முல்லைத்தீவு, பெப். 9

நில அளவைத்திணைக்கள உத்தியோகத்தர்களைக் கடமையைச் செய்யவிடாமல் தடுத்தமை தொடர்பான வழக்கில் எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன் உள்ளிட்ட நால்வர் மீதான விசாரணை அமர்வு எதிர்வரும் ஜூலை மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில், மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியை சுவீகரிக்க நில அளவீட்டாளர்கள் சென்றனர். இதன்போது அவர்களை பணிபுரிய விடாமல் தடுத்தமை, வாகனத்தை சேதப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட் டில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது எதிர்வரும் ஜூலை மாதம் 26ஆம் திகதிக்கு வழக்குத் திகதியிடப்பட்டுள்ளது. (வ-19)



## பட்டப்பகலில் வீட்டில் திருட்டு

வவுனியா,பெப்.9

பட்டப்பகலில் வீடுடைத்து, நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் வவுனியா, பண்டாரிக்குளம், மாடசாமி கோவில் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வீட்டார் உறவினர் ஒருவரின் பூப்புனித நீராட்டு விழாவுக்குச் சென்றுள்ளனர். அதன்போது பட்டப்பகலில் மதில் ஊடாக வீட்டுக்குள் நுழைந்தவர்கள் அங்கிருந்து 4 பவுண் நகை மற்றும் 5 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடியுள்ளனர். வீடு திரும்பியவர்கள், வீடு திறந்திருந்ததை அடுத்து, திருட்டு இடம்பெற்றதை அறிந்தனர். பண்டாரிக்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மற்றும் தடவியல் பொலிஸார் மோப்பநாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-4,18)

## மஹிந்தவின் ஆட்சிக்குப் பின்னரே நாட்டின் பொருளாதாரம் பாதிப்பு

### சுரேஷ் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 9

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்துக்குப் பின்னரே, நாட்டின் பொருளாதாரம் கேள்விக்குறியானது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதாரம் கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதாளத்துக்குள் சென்றுவிட்டது என்று கூறுகின்றனர். அது உண்மை இல்லை. மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியின் பின்னர் தான் நாட்டுக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையம் முதல், அம்பாந்தோட்டை துறைமுகம் வரை திட்டமிடப்படாத நிகழ்ச்சி நிரலுக்குள் நாடு சென்றுவிட்டது.

இப்போது மின்சாரம், எரிபொருள் என எல்லாமே பிரச்சினையாக உள்ளன. பொருள்களின் விலையை வியாபாரிகளே நிர்ணயிக்கின்றனர். இதற்கு நிதி அமைச்சரே பதில் கூறவேண்டும்.

பஸில் ராஜபக்ச பொருளாதாரக் கொள்கையை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்க்க வேண்டும் - என்றார். (ம-4,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பங்கள் கோரல்

**மொறட்டுவப் பல்கலை**

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீடத்தின் கணிதத் துறையால் ஆய்வியல் முதுவிஞ்ஞானமாணி கற்கை நெறி மற்றும் ஆய்வியல் பட்டப்பின்படிப்புக் கற்கைநெறி ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும். மேலதிக விவரங்களை 071 9349205 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**பேராதனைப் பல்கலை**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார கற்கைகள்பீடத்தின் தாதியியல் துறையால் தாதியியல் முதுவிஞ்ஞானமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு தாதியியல் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும். மேலதிக விவரங்களை உதவிப்பதிவாளர் இணைந்த சுகாதார விஞ்ஞானகற்கைப்பீடத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அறுவடையும் பொங்கலும்

கரவெட்டி, பெப். 9

துன்னாலை கிழக்கு கமக்கார அமைப்பும் கரவெட்டி கமநல சேவைகள் நிலையமும் இணைந்து நடத்தும் நெல் அறுவடை நிகழ்வும் பொங்கல் விழாவும் புளியங்கியான் சிதம்பர விநாயகர் கோவில் முன்றிலில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் என கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். (வ-9)

## கவிதைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 9

42ஆவது ஆண்டில் கால்பதிக்கும் புதிய அலை கலை வட்டம், இவ்வாண்டுக்கான கலை, கலாசாரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் இப்போட்டிகளில் முதற்கட்டமாக கவிதைப் போட்டி இடம்பெறவுள்ளது. இதில் பங்குபற்றுவோர் விரும்பிய தலைப்பில் கவிதைகளை அனுப்பி வைக்கலாம் எனவும் கவிதைகள் மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கவிதைகள் 12 வரிகளுக்கு குறையாது 24 வரிகளுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு ஒருவர் ஓர் ஆக்கத்தை மட்டுமே அனுப்பி வைக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## முகாமையாளர் இடமாற்றம்

சாவகச்சேரி, பெப். 9

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையின் முகாமையாளராக கடமையாற்றிய அ.கெங்காதரன், பருத்தித்துறை கிளையின் முகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்துக்கு அங்கு கடமையாற்றிய இ.இன்பராஜ் இடமாற்றப்பட்டுள்ளார். (வ-9)

### தீவிரமாகின்றது கொரோனாத் தொற்று

# மருத்துவமனைகளில் இடநெருக்கடி ஏற்படும்



கொழும்பு, பெப். 9

**கொரோனாத் தொற்றாளர்களின் திடீர் அதிகரிப்பால், மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை நிலவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த இரண்டு வாரங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்திருந்தது. ஏனைய நோயாளிகளுக்கு ஏற்படும் அசௌகரியத்தைத் தவிர்ப்பதற்காக, 14 ஆயிரம் படுக்கைகள் தயார் நிலையிலும், 6 ஆயிரம் படுக்கைகள் பயன்பாட்டிலும் உள்ளன.

கொரோனாத் தொற்றாளர்களுக்கான ஏற்பாடுகளை மருத்துவமனைகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன.

கொரோனாத் தொற்றாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 70 அதி தீவிர சிகிச்சைப் பிரிவின் படுக்கைகளில், 59 படுக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. தொற்று பரவுவதைத் தடுக்க அனைவரும் எமக்கு ஆதரவளிக்க வேண்டும். இதே நிலை நீடித்தால் இன்னும் சில நாள்களில் மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை ஏற்படலாம். அதேவேளை, கடந்த சில தினங்களில் கொரோனாத் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்களிடத்தில் ஆர்வம் அதிகரித்துள்ளது. இது வரவேற்கத்தக்க விடயம் - என்றார். (ம-4-இ)



## கிழக்கு மாகாணத்துக்கு செயலாளர் நியமனம்

கொழும்பு,பெப்.9

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக, துசித்த பி.வனிகசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடமிருந்து அவர் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாகச் சேவையின் சிரேஷ்ட அதிகாரியான துசித்த பி.வனிகசிங்க, கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். அரச நிறுவனங்கள் பலவற்றிலும் பல்வேறு பதவிநிலைகளை அவர் வகித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

## பொதுப்போக்குவரத்தில் தடுப்பூசி அட்டை கட்டாயம்

கொழும்பு, பெப். 9

பொதுப்போக்குவரத்தில், கொரோனாத் தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது ஒரு தொற்றுநோய். இந்த நிலைமை தொடர்பான முடிவுகளை சுகாதார அமைச்சு எடுக்கவேண்டும். அதற்கமைய தடுப்பூசியின் 3 டோஸ்களையும் பெற்றவர்கள் மாத்திரமே பொதுப்போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்ற நடைமுறையைப் பின்பற்றவேண்டும்.

இது தொடர்பில் எங்களுக்கு கடிதம் மூலம் எதுவும் தெளிவுபடுத்தப்படவில்லை. எங்களுக்கு எழுத்து மூலம் தகவல் கிடைத்தவுடன் பொதுப்போக்குவரத்தில் தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்க ஆலோசனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிஜிற்றல் அடையாளத் திட்டம் இந்தியாவின் உதவிகோரப்படும்

கொழும்பு, பெப். 9

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள டிஜிற்றல் அடையாளத் திட்டத்துக்கு இந்தியாவின் உதவியைப் பெறுவதற்கான உடன்படிக்கையில் இரு நாடுகளும் கைச்சாத்திடவுள்ளன.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பயோமெட்ரிக் தரவுகளின் அடிப்படையில் தனி நபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். (வ-இ)

## அதிகரிக்கும் வீதி விபத்துக்களால் அதிவேக வீதிகளில் ஓய்வறைகள்



கொழும்பு, பெப். 9

நாட்டில் வீதி விபத்துக்கள் இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே அதிகரித்துள்ளதால், முதற்கட்டமாக அதிவேக வீதிகளில் ஓய்வறைகளை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டில், பின்னதுவ, அபரெக்க, குருந்துகஹஹெதக்ம, அங்குனகொலபெலஸ்ஸ, அதுருகிரிய மற்றும் களனிகம ஆகிய இலங்கை அதிவேக நெடுஞ்சாலைகளில் 7 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துக்களால் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் அதிகளவான விபத்துக்கள் சாரதிக்கு உறக்கம் ஏற்பட்டதன் காரணமாக நிகழ்ந்துள்ளன. அதனால் அதிவேக வீதிகளில் ஓய்வறைகளை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதனால் அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களை ஆறு மாதங்களுக்குள் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிந்தக குணரத்னவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# அரசு தீர்வு வழங்காததாலேயே இந்தியாவை நாடுகிறார்கள் தமிழர்கள்

## தேசிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 9**

**தேசியப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வுகளை வழங்காதிருப்பதாலேயே தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியாவை நாடி தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

ஜே.வி.பி. தலைமையகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்ற போது சர்வதேசத் தலையீடுகள் காணப்பட்டமை இரகசியமல்ல. இலங்கையின் அரச தலைவர்களே அவ்வாறான தலையீடுகளுக்கு வாய்ப்பளித்துள்ளனர்.

சர்வதேசத் தரப்பினர் ஒவ்வொருவரையும் பற்றிக் கொண்டு எவ்வாறு பயனைப் பெற்றுக்கொள்வது என்பதே எமது வெளிநாட்டு கொள்கையாகக் காணப்படுகிறது. தேசிய சொத்துக்களை விற்றாவது சர்வதேசத்தை திருப்திப்படுத்தி தற்காலிகத் தீர்வைப் பெற்றுக்கொள்வதே தற்போதைய அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கையாகவுள்ளது.

இவ்வாறு இடம்பெறும் போது நிச்சயம் சர்வதேசத் தலையீடுகள் காணப்படும். தற்போது வெளியுறவுகள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்தியா சென்றுள்ளார். அதற்கு முன்னர் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியா சென்றார். அரசாங்கத்தால் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படவில்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றுக்கு கோரிக்கை விடுத்துள்ள போதிலும் , நீண்ட காலமாக அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இப்போது அவர்கள் மாற்று வழியில் தீர்வுகளைக் காண வேண்டிய நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர்- என்றார். (எ-இ)

# தென்னாசிய நாடுகளிடம் கையேந்துகிறது இலங்கை

## அரசின் செயற்பாடுகளை சாடுகிறது எதிர்க்கட்சி

கொழும்பு, பெப். 9

தென்னாசிய நாடுகளிடம் கையேந்தி கடன் பெறக்கூடிய நிலைமைக்கு தற்போது இலங்கை தள்ளப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பணவீக்கம் அதிகரித்துச்செல்லும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 12ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. தற்போது நாட்டில் பணவீக்கம் 24 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2005ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் சிரேஷ்ட நிதி அமைச்சர்கள் பலர் காணப்பட்டனர். அவர்களால் பொருளாதாரம் சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டது. ஆனால் 2005 இல் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் நிதி அமைச்சை அவர் பொறுப்பேற்றதன் பின்னர் பொருளாதாரச் சீரழிவு ஆரம்பமானது.

2010ஆம் ஆண்டு 21 பில்லியன் டொலராகக் காணப்பட்ட வெளிநாட்டுக் கடன், 2015ஆம் ஆண்டு 42 பில்லியன் டொலராக அதிகரித்தது. 5 ஆண்டுகளில் மஹிந்த ராஜபக்ச 21 பில்லியன் டொலர் கடன் பெற்றுள்ளார். ஆனால், 2015 தொடக்கம் 2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் 12 பில்லியன் டொலர் மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டது. சுதந்திரத்துக்கு பின்னர் மஹிந்த ராஜபக்ச ஆட்சி காலத்திலேயே அதிக கடன் பெறப்பட்டுள்ளது.

அடுத்த தேர்தல் ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயம் ஆட்சியமைக்கும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதி வழங்காமை, உரப் பிரச்சினை மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு என்பனவே இந்த அரசாங்கம் அடுத்த தேர்தலில் தோல்வியடைவதற்கான பிரதான காரணிகளாக அமையும்- என்றார். (எ-இ)

# சிமெந்து விற்பனை நிலையங்கள் சோதனை

கொழும்பு, பெப். 9

சிமெந்தை அதிக விலைக்கு விற்பனை செய்யும் இடங்களில், நுகர்வோர் அதிகார சபையினர் சிறப்புச் சோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவும் சிமெந்துத் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி, பல பகுதிகளில் சிமெந்து அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு மூடை சிமெந்து ஆயிரத்து 350 ரூபாவுக்கும் அதிகமான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று நுகர்வோர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சில வியாபாரிகள் சிமெந்து மூடை ஒன்றை ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 600 ரூபா வரை விற்பனை செய்கின்றனர்.

இதனையடுத்து நுகர்வோர் அதிகார சபையினர் சோதனை நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். (ம-4.இ)

# மூளையின் ஒரு பகுதியேனும் இருக்குமா என்பது சந்தேகம்!

## பஸிலை தாக்குகிறார் முஜிபுர்



கொழும்பு, பெப். 9

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு 7 மூளைகள் உள்ளன என்று கூறப்பட்டாலும், ஒரு மூளையின் ஒரு பகுதியேனும் இல்லாததைப் போன்றே அவரது செயற்பாடுகள் இருக்கின்றன.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்.

சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை மீது சிறிதளவு நம்பிக்கை காணப்படுகின்றது. அதையும் பாழாக்கும் வகையிலான கருத்துக்களையே நிதி அமைச்சர் தெரிவித்து வருகின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)



# இலங்கை உணவுகள் ஜப்பானில் போட்டிக்கு

கொழும்பு, பெப்.9

இலங்கை உணவுகளை சமைக்கும் போட்டி, ஜப்பானில் தொடங்கப்பட்டது. ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை சமையல் கலைஞர்களின் உதவியுடன் ஜப்பானில் உள்ள மக்களுக்காக இந்தப் போட்டியை ஏற்பாடு செய்தது. இதில் 45 போட்டியாளர்கள் பங்கேற்றனர். இதன் இறுதிப் போட்டியை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் அனுசரணையுடன் ஜப்பானில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. (ம-4-இ)



# ராஜபக்ச அரசுக்கு இனித் தோல்வியே

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 9

எந்தத் தேர்தல் நடந்தாலும், ராஜபக்ச அரசு இனி படுதோல்வியடைவது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள சட்டச் சிக்கல் காரணமாக, விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரீசிலித்து வருகின்றது என்று வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தத் தேர்தலையும், எந்த வேளையிலும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஆனால், ராஜபக்ச அரசுக்கு தேர்தலை எதிர்கொள்ளும் திராணி இல்லை. அதனால் தான் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு இந்த அரசு நீடித்தது. இப்போது விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் பரீசிலித்து வருகின்றது என்ற செய்தி வேடிக்கையாகவுள்ளது.

மாகாணசபைத் தேர்தலை இந்த அரசு நடத்த முடியும். தோல்விப் பயம் காரணமாகவே மாகாணசபைத் தேர்தலை நடத்த இந்த அரசு பின்னடிக்கின்றது. தேர்தல் பயம் காரணமாகவே உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தையும் இந்த அரசு ஓராண்டுக்கு நீடித்தது- என்றார். (ம-4,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்துடைப்புகள் புதிதல்லவே!

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்த எட்டுப் பேர் கோத்தாபய அரசாங்கத்தால் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சில வாரங்களில் ஜெனிவா மனித உரிமைகள் சபையின் அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் – இந்தக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடிகள் ஏற்படுத்தப்படலாம் என்று கருதப்பட்ட பின்னணியில் – மேற்படி எட்டுப் பேருக்கும் கிட்டியுள்ளது பிணை.

'பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்தவர்கள் விடுவிப்பு' என்ற பொத்தம் பொதுவான பார்வையின்கீழ் இந்த விடுவிப்பு வரவேற்கப்பட வேண்டியதாயினும், உண்மையில் தமிழர்களின் கோரிக்கையென்பது இதுவல்ல. என்ன காரணத்துக்காக கைதுசெய்யப்பட்டோம் என்றே தெரியாமல் பல அரசியல் கைதிகள் 'பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்'பலதசாப்தங்கள்கடந்தும்சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களை இனியாவது விடுவிக்கவேண்டும் என்றுதான் தமிழர் தரப்பு பல்வேறு அரசாங்கங்களிடமும் மாறிமாறி வலியுறுத்தி வருகின்றது. ஆனால், அவர்களுக்குப் பதிலாக மிகச் சிறு குற்றங்களுக்காக சிறையிடப்பட்டவர்களை – எப்போதோ விடுவிக்கப்பட்டிருக்க வேண்டியவர்களை – விடுவித்து கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றுவதொன்றும் இலங்கை அரசாங்கத்துக்குப் புதிதல்ல. இது இத்துடன் முடிந்து விடப்போகும் விடயமுமல்ல.


சுமார் 20, 30 ஆண்டுகளாக நீதிமன்றப் பொறிமுறைகளுக்கு உட்படுத்தப்படாமல், வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளாமல், குறைந்தபட்சம் என்ன காரணத்துக்காக தடுத்து வைத்திருக்கின்றார்கள் என்றேனும் தெரியாமல் இதுவரை சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்பது தான் தமிழர்களின் ஒருமித்த வேணவா. இவர்களை நிரந்தரமாக விடுவிக்க முடியாவிடினும் குறைந்தபட்சம் நீதிமன்றப் பொறிமுறைகளுக்கு உட்படுத்தவேனும் அரசால் முடிந்ததா?. அவ்வளவு ஏன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால விடுவிப்பதாக உறுதியளித்த, ஆனந்தசுதாகரனைக் கூட, அப்படி வாக்குறுதி வழங்கி பல வருடங்கள் கழிந்தும் இலங்கை அரசு விடுவிக்கவில்லை. பல ஆண்டுகள் சிறைப்பறவைகளாக இருப்பதனால், அரசியல்கைதிகளின் வெளியகத் தொடர்புகள் தற்போது முற்றுமுழுதாக இல்லாமல் போயிருக்கும். இவர்கள் தமக்கு எதிரான சாட்சியங்களை அழிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள்கூட தற்போது இல்லை. இப்படியிருக்கையில் ஏன் இவர்களை பிணையில் கூட விடுவிக்க அரசால் முடியவில்லை? ஏன் இந்தச் சிறைப்படுத்தல்? ஏன் இந்தப் பாரபட்சம்?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வை எதிர்கொள்ள – அங்கு தனக்கு ஏற்படக்கூடிய எதிர்ப்பை தற்காலிகமாகச் சமாளிக்க – நன்கு திட்டமிட்டு இந்த எண்மரின் விடுவிப்பை அரங்கேற்றியுள்ளது அரசாங்கம். வடமாகாணத்துக்கு அண்மையில் பயணம் மேற்கொண்ட நீதி அமைச்சர் அலி சப்ரி, அரசியல் கைதிகள் சிலர் விரைவில் விடுவிக்கப்பட வுள்ளனர் என்று தெரிவித்த கருத்தும் அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் இப்போது இந்த விடுவிப்பும் நன்கு திட்டமிட்ட 'ஸ்கிரிப்ட்' என்பது தெட்டத்தெளிவு.

அரசாங்கத்தின் இந்தக் கபடத்தனத்தை ஐ.நா. நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். இந்தக் கபடத்தனம் இன்றுநேற்று நடப்பதல்ல. சர்வதேசத்துக்கும் இது பழக்கப்பட்ட விடயம்தான். இந்தப் பித்தலாட்டங்களுக்கு செவிசாய்க்காது அரசாங்கத்துக்கு எதிரான பிடியை ஐ.நா. இறுக்க வேண்டும். பொறுப்புக்கூறலை வலியுறுத்த வேண்டும். அதைத்தான் பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழர்களும் எதிர்பார்க்கின்றனர். அதை விடுத்து கொழும்பின் மீதான சகிப்புத் தன்மை[illegible] மேற்கொண்டு வழங்கும் கால அவகாசங்க[illegible] அல்ல.

நாளொரு நல்வார்த்தை

"கல்வியின் வேர்கள் மிகவும் கடினமானவை. ஆனால் அதன் பழம் இனிமையானது.!" - அரிஸ்டோட்டில்




### சட்டவிரோதமாக

# மாடுகள் வெட்டப்படுவதால் சேதன உரவுற்பத்தி பாதிப்பு

### தீவக சிவில் சமூக அமைப்பின் செயலாளர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், பெப். 9**

**கால்நடைகளை சட்டவிரோதமாக இறைச்சிக்காக வெட்டுவதால் சேதனப் பசளை உற்பத்தி பாதிக்கப்படும் என தீவக சிவில் சமூக அமைப்பின் செயலாளர் மா.இளம்பிறையன் தெரிவித்தார்.**

மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுவது தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தீவகத்தில் பல மக்கள் கால்நடைகளின் எருக்களை உரங்களாக மாற்றி அவற்றின் மூலம் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். இந்த நிலையில் அங்கு ஒவ்வொருநாளும் மாடுகள் இறைச்சிக்காக திருடி வெட்டப்பட்டு மண்டைதீவு காவலரணைத் தாண்டி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விற்பனைக்குக் கொண்டுசெல்லப்படுகிறது. இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(வ-125)

### யாழ். போதனாவில்

# தன்னார்வத் தொண்டர்களை இணைக்க நேர்முகத்தேர்வு!

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்.போதனா மருத்துவமனையில் சுகாதார உதவியாளராக தன்னார்வத் தொண்டர்களை 3 மாதங்கள் பணிபுரிவதற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை இடம்பெறவுள்ளது என யாழ்.போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9 மணிக்கு மருத்துவமனை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தன்னார்வத் தொண்டராகப் பணிபுரிய விண்ணப்பதாரிகள் வழங்கிய விண்ணப்பத்தின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றனர்.

அத்துடன் நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் அனைவருக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் கிராம அலுவலரின் நற்சான்றிதழ் மற்றும் சுயவிபரக்கோவை ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

10.02.2022
வியாழக்கிழமை
தை 28
சுபநேரம் : 08.04 - 09.34
ராகுகாலம் : 02.04 - 03.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த (10.01.2022) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் வினாசித்தம்பி ஆனந்தக்கிருஷ்ணன்

(Retired Officer - State Film Co- Operation Ceylon)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (07.02.2022) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (09.02.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 10.01.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் திரு.வினாசித்தம்பி ஆனந்தக்கிருஷ்ணன் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோர், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோர், மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்கள் மற்றும் உடன்வந்து பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அயலவர்களுக்கும், உறவினர்கள், நண்பர்கள் என அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக கரம கூப்பி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாசமிகு குடும்பத் தலைவனாய்
அன்பிலுயர் துணைவனாய்
மேன்மை மிகு தந்தையாய்
உழைக்கும் கரங்களாய்
அமைதியின் உறைவிடமாய்
நற்பண்பாளனுமாய்
இல்லறம் சிறக்க வாழ்ந்து
நல்லறத்தின் வழிகாட்டிய தந்தையே
அப்பா உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்



தோற்றம் 19.10.1936
மறைவு 10.01.2022

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய் வடக்கு,

குடும்பத்தினர்

## உலகின் மிகப்பெரிய இக்ளூ உணவகம்

உலகின் மிகப்பெரிய இக்ளூ உணவகம் ஜம்மு காஷ்மீரின் பனிப்பிரதேசமான குல்மார்க் பகுதியில் அண்மையில் திறக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் குல்மார்க் பகுதியில் சுமார் 37 .5 அடி உயரமும் 44 .5 அடி அகலமும் கொண்ட பனியால் குறித்த உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வுணவகத்தில் சுமார் 40 பேர் வரை அமர்ந்து உணவு உண்ணலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இந்த உணவகம் தற்போது சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகிறது. (ச-இ)


## ஒமிக்ரோனுக்கு எதிராக தடுப்பூசி

புதுடில்லி, பெப்.9

இந்தியாவில் ஒமிக்ரோனுக்கு எதிரான தடுப்பூசியைத் தயாரிக்க சீரம் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒமிக்ரோன் வைரஸ் தற்போது உலகை அச்சுறுத்தி வருகிறது.

இந்தநிலையில், ஒமிக்ரோனுக்கு எதிரான தடுப்பூசியைத் தயாரிப்பதற்கு சீரம் நிறுவனத்துக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி அனுமதி அளித்துள்ளார்.

அதன்படி பரிசோதனை செய்வதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சீரம் நிறுவனம், ஏற்கனவே கொவிஷீல்ட் தடுப்பூசியை உற்பத்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் மறைந்து சுமுக உறவு உண்டாகும். குழந்தைகளின் திறமைகள் வெளிப்பட்டு பாராட்டுபெறுவர். வீண் அலைச்சல் குறையும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**இடபம்:** காலையிலேயே மனதுக்கு இனிய நிகழ்ச்சி நடக்கலாம். கவலை குறையும். நண்பர் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவார். வழக்குகள் சாதகமாக முடியும். பரபரப்பு அதிகரிக்கும்.

**மிதுனம் :** பொதுத் தொடர்புகள் விரிவடையும். யோகமான நாள். நியாயமான வழியிலும், மனச்சாட்சிபடியும் செயற்படுவீர்கள். நல்லதொரு திசைத் திருப்பம் ஏற்படும்.

**கடகம்:** கணவன் மனைவி இணைந்து நிதி பற்றி தீர்மானிப்பீர்கள். தள்ளிப்போட்ட வேலைகளை இன்று முடித்து நிம்மதி காண்பீர்கள். பெரியோர், உயர் அதிகாரிகளின் ஆதரவு உற்சாகம் தரும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் வெற்றி பெறும். நல்ல எண்ணங்கள் வரும். மாலையில் அலைபேசி மூலம் வரும் செய்தி மகிழ்ச்சி தரும். பிரச்சினை ஏற்படாதபடி எச்சரிக்கை தேவை.

**கன்னி:** யாருடனும் வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். பிறரிடம் வாக்குவாதம் செய்யாதிருந்தால் மன உளைச்சல் வராது. [illegible] மகிழ்வீர்கள்.

**துலாம்:** வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவிகரமாக இருப்பர். சூழ்நிலை அறிந்து பிறருக்கு விட்டுக் கொடுப்பீர்கள். பிரச்சினை தீரும். வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். கலகலப்பான நாள்.

**விருச்சிகம்:** பணியிடத்தில் உயர் அதிகாரியை அனுசரித்துச் செல்வது நல்லது. வீடு தொடர்பான பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். இன்று இனிய செய்தி ஒன்று வந்து உங்களை மகிழ்விக்கும்.

**தனுசு:** வெளிவட்டாரத்தில் புதிய சந்திப்பு பற்றி கவனம் தேவை. ஒன்லைனில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சமூகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். உறவினர் தொடர்பு கொள்வர்.

**மகரம்:** குடும்பத்தினரின் விருப்பத்துக்கேற்ப செயற்படுவீர்கள். வழக்கத்துக்கு அதிகமாக உழைக்கத் தொடங்குவீர்கள். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும்.

**கும்பம்:** உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். பணியிடம் அல்லது கட்சியில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். உங்களின் மதிப்பு உயர்வதால் மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்:** பலநாளாக எதிர்பார்த்த உயர்வும் நன்மையும் வரும். எதிர்காலத்துக்கு உதவக்கூடிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணியிடத்தில் பாராட்டின் அடையாளமாக உங்களுக்குச் சிறு நன்மை வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவசரப் பணத் தேவைக்கு உதவும் நம்பகமான உறவினர்

உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிஉயர் முற்பணத் தொகையுடன்

- 0.71% ஆகக் குறைந்த மாதாந்த வட்டி
- நட்புறவுடன் கூடிய செயற்திறன் மிக்க சேவை
- மீண்டும் மீண்டும் புதுப்பிக்கும் வசதி
- தேவைக்கேற்ப மீள செலுத்தும் வசதி
- மறைமுக கட்டணங்கள் இல்லை
- உங்கள் இரகசியத் தன்மைக்கான பாதுகாப்பு உத்தரவாதம்

ரண் சுரெக்கும் கடன்சேவை

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# சிறாப்பர்மடம் புனரமைப்பு: 2ஆம் கட்டடத்துக்கு அடிக்கல்

**யாழ்ப்பாணம், பெப். 9**

**கீரிமலை சிறாப்பர் மட மீள் புனரமைப்பின் இரண்டாம் கட்டடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.**



சிறாப்பர் மடத்தின் முதலாம் கட்டட புனரமைப்பு, சிறாப்பர் மட நிதியத்துடன் இணைந்து தொல்லியல் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில் சிறாப்பரின் நான்காவது வாரிசான பொன்னா விக்னராஜாவின் நினைவுதினத்தை முன்னிட்டு, நேற்று இரண்டாம் கட்டத்துக்கு அடிக்கல் நடப்பட்டது.

தொடர்ந்து சிறாப்பரின் காலத்தில் இருந்த நகுலேஸ்வர ஆலயத்துக்கு பாரம்பரியமாக எண்ணெய் வழங்கும் மரபு சிறாப்பர் நிதியத்தால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.


நிகழ்வில் சிறாப்பர் நிதியத்தின் சார்பில் சிறாப்பரின் குடும்ப வாரிசுகளான கௌரி பொன்னையா, விக்னராஜா, யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரி பா.கபிலன், தொல்லியல் திணைக்கள ஊழியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். (ம-4-125)

# இருவேறு இடங்களில் போதை மாத்திரைகள் மீட்பு

## இருவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்ப்பாணத்தின் இருவேறிடங்களில், போதை மாத்திரைகளுடன் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.



நல்லூர் பகுதியில் போதை மாத்திரைகளை ஒருவர் உடைமையில் வைத்துள்ளார் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், ஒருவரைக் கைது செய்தனர். யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை சுன்னாகம் - மயிலணிப் பகுதியிலும் போதை மாத்திரைகளை ஒருவர் உடைமையில் வைத்துள்ளார் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த விசேட தகவல்கள் அடிப்படையில், சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபரைக் கைது செய்தனர். குறித்த நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இருவரையும் நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-4,125,27,23,26,20)





**திரு.மரியநாயகம் அன்ரன் யோசவ் (கலாபூஷணம்)**
**திருமதி.மறிஸ்ரெலா மதுரம் தம்பதியினர்**

ஊர்காவற்துறை நாரந்தனையில் பிறந்து யாழ். திருக்குடும்ப கன்னியர்மடத்தில் ஆரம்பக் கல்வியையும் யாழ். பத்திரிசியார் கல்லூரியிலும். நாரந்தனை ஆண் பாடசாலையிலும் கல்விகற்று. இல.95. வட்டக்கச்சியிலுள்ள இல்லத்தில் வாழ்ந்து கிளி/புனித திரேசா கல்லூரியில் கற்கைகளை நிறைவு செய்து. கொழும்பு அரச நுண்கலை கல்லூரியில் சித்தரமும். வர்ணமும். ஸ்ரான்லி அபயசிங்கா. மொறிஸ் பேரேரா. விஜயசேகரா போன்ற புகழ்பெற்ற கலைஞர்களிடம் 3 வருடங்கள் பயிற்சிபெற்று சித்திராசிரியர் தராதரப்பத்திரம் பெற்று கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் சித்திரசிற்ப ஆசிரியராக 12 வருடங்கள் பணியாற்றிய காலப்பகுதியில் பலாலி ஆசிரிய கலாசாலையில் கல்விகற்று. கவின்கலை சித்திரப்பயிற்சியை நிறைவு செய்து. இக் காலப்பகுதியில் 18/B. கோவில் வீதியில் துணைவியை திருமணம் செய்து. பணி தொடர்ந்தும் கிளி/புனித திரேசா கல்லூரியிலும் திருவையாறு ம.வியிலும் வட்டக்கச்சி ம.வியிலும் சித்திராசிரியராக பணியாற்றி கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய ஆலோசகராகவும். தொலைக் கல்வி போதனாசிரியராகவும். எல்லாமாக 34 வருடங்கள் பணியின் மூலமாக சித்திர சிற்பக் கலைஞர்கள் உருவாகியும். புலோலியில் கந்தமுருகேசனார் சதா அவதானி நா.கதிரைவேற்பிள்ளை இருக்கின்ற சிலைகளும். இருதய ஆண்டவர். இறை இரக்கத்தின் இயேசு. அன்னைத் திரேசா. வரவேற்பு மாதா. மாதாவின் மடியில் உயிர்விட்ட இயேசு. காவற் சம்மனசு. பற்றி மாதா போன்ற சிலைகள் மூலமாக கலாபூஷண விருது. கலைக்குரிசில் விருது. யாழ்.ரத்தினா விருது. யாழ் ஓசை விருது. முதலமைச்சர் விருது பெற்றவராக 34 வருட சேவைக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொண்டவராக திருமண வாழ்வின் 50 வருட பொன்விழா கண்டுள்ளார்.

வாழ்த்துவோர்: **God Sons**
**MrJudenoried Francis**
**(CEO of JC's Group of Companies)**
**Mr.Joe Kumar Francis**
**(Owner of SeetJoe Cakes)**
**சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்**

**18B, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 899 5778**


# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 9

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் வாராந்த சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும் இடம்பெறுகின்றன.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆறாவது சொற்பொழிவு நிகழ்வு கம்பர்மலை ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப் பாடசாலையில் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் 'நாவலர் தோன்றிய காலமும் நாவலர் ஏற்படுத்திய மாற்றமும்' எனும் தொனிப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

# மருதடி மஹோற்சவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.9

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 23ஆம் திகதி ஆலய அன்னதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதன்படி அன்றையதினம் பிற்பகல் 2.30 மணியிலிருந்து 3 மணிவரை மஹோற்சவ உபயகாரர்களுடனான கலந்துரையாடலும், 3மணியிலிருந்து 4மணி வரை மஹோற்சவ முன் ஏற்பாட்டுக் கூட்டமும் இடம்பெறவுள்ளன என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யு.யசோதா அறிவித்துள்ளார். (வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த இந்தியாவால் முடியும்!



## நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் தெரிவிப்பு

இணையவழிச் செவ்வி - சோபிகா

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இன்று நடந்தேறும் நில அபகரிப்புக்கள், சிங்களக் குடியேற்றங்கள், இலங்கை–இந்திய ஒப்பந்தத்தில் உறுதிசெய்யப்பட்ட தமிழர் தாயகத்தை அழிக்கின்றன என்ற அடிப்படையில் இந்தியாவால் இலங்கையைச் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தமுடியும். ஆனால்,அதற்குரிய விருப்பு இந்தியாவிடம் இருக்கவேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன். அவருடனான செவ்வியின் முழுவடிவம் கீழே தரப்படுகின்றது.

**கே: இந்தியப் பிரதமர் மோடிக்கு 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான கடிதம் தமிழ்க் கட்சிகளால் அனுப்பப்பட்டமை தொடர்பாக தங்களின் கருத்து என்ன?**

ப: புத்தாண்டுச் செய்தியில் நான் கூறியபடி எமக்கான போராட்ட அரங்கை நாங்களே தீர்மானிக்க வேண்டும். எமக்கான போராட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலை நாமே வடிவமைக்க வேண்டும். தமிழர் தேசத்தின் உரிமைப் போராட்டம், ஸ்ரீலங்கா அரசின் இனவழிப்பில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசொன்றை அமைத்துக்கொள்வதற்கான போராட்டமாக வரலாற்றுப் போக்கில் வடிவெடுத்தது. முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பின்னர் இனவழிப்புக்கு எதிரான பரிகாரநீதி என்ற வகையில் தனித் தமிழீழ அரசு அமைவதே ஈழத் தமிழர் தேசத்தின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்ற நிலைப்பாட்டை முன்வைத்து நாம் செயற்பட்டு வருகிறோம். 6ஆம் திருத்தச் சட்டம் காரணமாகத் தாயகத்தில் உள்ள தலைவர்கள் இந்த நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைத்துச் செயற்பட முடியாது என்பதனை நாம் அறிவோம். இருப்பினும், ஈழத்தமிழர் தேசத்துக்கான அரசியல் தீர்வு என்பது சிங்கள இனவாதப் பூதத்தின் இனவழிப்பிலிருந்து தமிழ் மக்களைக் பாதுகாக்கக்கூடியதொரு வடிவத்தில் அமையவேண்டும் என்பதில் தாயகத் தலைவர்கள் சமரசம் ஏதுமின்றிச் செயற்படவேண்டும். அரசியல் தீர்வு தொடர்பான உரையாடல்கூட முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கான பரிகார நீதியை மையப்படுத்தியே அமையவேண்டும்.

### 13ஆவது திருத்தத்தில் அர்த்தம் ஒன்றுமில்லை

13ஆம் திருத்தச் சட்டமும் அதன் வழிவந்த மாகாணசபை முறையும் ஈழத்தமிழ் மக்களை சிங்களத்தின் இனவழிப்பிலிருந்து எந்தவகையிலும் காப்பாற்றப்போவதில்லை. இதனால் 13ஆவது திருத்தச் சட்டம் குறித்துப் பேசுவதில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்து அர்த்தம் எதும் இருக்கப் போவதில்லை.

மேலும், இன்னுமொரு விடயத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன். இலங்கை அரசு, சிங்கள இனவாதக் கட்டமைப்பாக இறுகிப்போயுள்ளது. இதனால்தான் ஸ்ரீலங்கா அரச கட்டமைப்புக்குள் தமிழர்களுக்கு அரசியல்தீர்வு என்பது சாத்தியப்படப்போவதில்லை என நாம் கூறி வருகிறோம். எந்தவொரு அரசியல்தீர்வுக்கும் சிங்கள இனவாதம் இடம் தரப்போதில்லை என்பதே வரலாற்று உண்மை. கடந்த காலங்களில் செய்யப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம் போன்றவற்றுக்கு நேர்ந்த கதியையும் வரலாறு அறியும். இலங்கை நாடாளுமன்றில் ஜனாதிபதி கோத்தா ஆற்றிய உரையே இதற்கு சமீபத்திய சாட்சி.

சுனாமி பேரழிவின்போது மக்களை அழிவில் இருந்து மீட்டெடுக்க இணைத்தலைமை நாடுகளின் துணையுடன் உருவாக்கப்பட்ட சுனாமிக் கட்டமைப்பையே சிங்கள பேரினவாதப்பூதம் தனது நீதிமன்றின் ஊடாக கிழித்தெறிந்தது. இயற்கைப் பேரிழிவில் இருந்து மக்களை மீட்பதற்கான மனிதநேயக் கட்டமைப்பையே கிழித்துப் போட்டவர்களிடத்தில் அரசியல் தீர்வை எப்படி எதிர்பார்க்க முடியும்?

எம்மைப் பொறுத்தவரை, தாம் எந்த அரசியல் ஏற்பாட்டுக்குள் வாழவேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்கின்ற வகையில், ஒரு பொதுவாக்கெடுப்பின் மூலமாகவே அரசியல் தீர்வு காணப்படவேண்டும். பொதுவாக்கெடுப்பை கோருவதற்கு 6ஆம் திருத்தச் சட்டம் என்பது தடையாக இல்லை. எனவே தாயகத்தில் இருந்து இதற்கான குரல்கள் ஓங்கி ஒலிக்கவேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

### நில அபகரிப்பை நிறுத்தாது '13'

**கே: 13ஆவது திருத்தம் ஒரு தொடக்கப்புள்ளி என்றும் தற்போது இலங்கை அரச கட்டமைப்புக்களால் நிகழ்த்தப்படும் நில அபகரிப்புக்களை தடுத்த நிறுத்த இது உதவும் என்றும் கூறப்படுகின்றதே?**

ப: இது தவறான கருத்து. வாதமும்கூட. 13க்கு கீழ் அரச நிலங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் கைகளில்தான் உள்ளது. மாகாண சபையுடன் ஆலோசித்துவிட்டு மத்திய அரசாங்கம் காணிகளை எடுத்துக்கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

காணிகளை மத்திய அரசு எடுப்பதற்கு மாகாணசபையின் அனுமதி தேவையில்லை. மாகாணசபையுடன் நடப்பது கலந்தாலோசனை மட்டுமே. இதற்கு எந்தவொரு சட்ட வலுவும் இல்லை என இலங்கை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இது தொடர்பில் முன்னராக சொன்ன கூற்றையும் நினைவுபடுத்திக்கொள்ளலாம். மேலும் காணிகளை பகிர்வது என்பது தேசிய இனவிகிதத்தின் அடிப்படையில் அன்றி மாகாண இனவீதத்தின் அடிப்படையில் அல்ல என '13'இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகாண சபைக்குள்ளான எந்தவொரு விடயத்தையும் தேசியக் கொள்கை எனக்கூறி 'கொழும்பு' பறித்துக்கொள்ளவும் முடியும். சமீபத்திய நாள்களில் மாகாணப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக உள்வாங்கிக் கொள்கின்ற கொழும்பின் நடத்தையின் தந்திரத்தை இதில் புரிந்து கொள்ளலாம். இதனால் மாகாணசபைகள் ஊடாக குடியேற்றங்களைத் தடுக்கலாம் என்பது ஏற்புடைய கருத்தல்ல

### இந்தியாவால் இலங்கையை நீதிமன்றத்தில் நிறுத்த முடியும்

**கே: 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது, இந்தியாவை எங்கள் விடயத்தில் தலையிடக்கோரும் நோக்கம் கொண்டதென கூறப்பட்டுள்ளதே?**

ப: 13ஆம் திருத்தச்சட்டம் என்பது ஓர் உள்நாட்டுச் சட்டம். அதனை நடைமுறைப்படுத்த கோரும் அதி[illegible] இல்லை. [illegible] தலையிடுவதற்கு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உரிமை உண்டு. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் இலங்கைத்தீவின் வடக்கு- கிழக்கு தமிழர்களின் தாயகம் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இன்று நடந்தேறும் நிலஅபகரிப்புக்கள், சிங்களக் குடியேற்றங்கள், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உறுதிசெய்யப்பட்ட தமிழர் தாயகத்தை அழிக்கின்றன என்ற அடிப்படையில், இந்தியா தலையீடு செய்யலாம். நாமும் இதனையே எதிர்பார்க்கின்றோம். ஆனால், இதற்கான விருப்பு இந்திய அரசுக்கு இருக்க வேண்டும்.

இலங்கை அரசைத் திருப்திப்படுத்தி தனது நலன்களை அடைந்துகொள்ளலாம் என்பது நாளடைவில் சாத்தியப்படப்போவதில்லை என்பதனை இந்திய அரசு புரிந்து கொள்ளும் நாள் வரும்போது இது நிகழ்வும் கூடும். இலங்கை- இந்திய ஒப்பந்தம் என்பது ஒரு சர்வதேச ஒப்பந்தம். அதனை இலங்கை மீறும்போது அதனை உலக நீதிமன்றத்துக்கு இந்தியா கொண்டு செல்லமுடியும். எம்மைப் பொறுத்தவரை, தமிழர் விடயம் தொடர்பில் தலையீடு செய்வதற்கு '13' தேவையில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தமும் தேவையில்லை.

1983 ஜுலை இனப்படுகொலையின்போது முன்னாள் இந்தியப் பிரதமரான நரசிம்மராவ், 1983 நவம்பரில் ஜீ.பார்த்தசாரதி, 1985 ரொமேஸ் பண்டாரி, 1986இல் சிதம்பரம் என இந்தத் தலையீடுகள், 13ஆம் திருத்தத்தைக் காட்டியோ அல்லது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைக் காட்டியோ நிகழவில்லை. இவை யாவுமே இதற்கு முன்னராக நிகழ்ந்தவை. அண்மையில் நேபாளத்தில் மதாசி தொடர்பாக இந்தியா அழுத்தம் கொடுத்தமை உள்நாட்டு சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது சர்வதேச ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ நிகழ்ந்தது அல்ல.

பங்களாதேஷ் விடயத்திலும் இந்தியா தலையிட்டமை உள்நாட்டு சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது சர்வதேச ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ நிகழ்ந்தது அல்ல. மாறாக பரிகார நீதியின் அடிப்படையிலே தனது தலையீடுகள் அமைந்தன என இந்தியா, ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் கூறியது. இதுபோல பரிகார நீதியின் அடிப்படையில் நாமும் எதிர்பார்க்கின்றோம். மேலும், இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்கள் வலுவுடன் இருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அவசியமானதும் கூட என்பதையும் மீளவும் வலியுறுத்துகிறோம்.

### '13'இனைக் கோருவதால் போராட்டம் வலுவிழப்பு

**கே: இந்த விவகாரத்தில் மேலதிகமாகச் சொல்லக்கூடியது ?**

ப: டில்லியை நாம் தமிழ்நாட்டுடன் இணைந்து கொண்டே அணுகவேண்டும். இனவழிப்புக்கு எதிராக சர்வதேச நீதி கோரியும், அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்புக் கோரியும் தமிழ்நாட்டு சட்டப்பெருமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மாணங்களைச் செயற்பூர்வமாக 'டில்லியை' நோக்கிக் கொண்டு செல்வதற்கு நாம் அனைவரும் உழைக்கவேண்டும். மாறாக '13'இனைக் கோருவது என்பது இந்தத் தீர்மாணங்களை வலுவிழக்கச் செய்வதோடு, தமிழர்களின் போராட்டத்தைப் பின்னோக்கி கொண்டு செல்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு தளபாடங்களுக்கான வர்ணப்பூச்சுக்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோர் கலந்து கொண்டு வர்ணப் பூச்சுக்களை பாடசாலை அதிபரிடம் கையளித்தனர்.

(ம-159)



இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு பொலிஸாரால் உண்ணாப்புலவு மருத்துவமனையின் வளாகம் துப்புரவு செய்து கொடுக்கப்பட்டது.

(ம)



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேணாவில் பகுதியில் தற்காலிக குடிசை அமைத்து குடியேறிய சுமார் 30 குடும்பங்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக குழாய்க்கிணறு ஒன்று அமைப்பதற்கான காசோலை ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட பிரதான அமைப்பாளர் மு.லக்சயனின் ஏற்பாட்டில் மனிதநேயம் மற்றும் ஆதர்சம் ஆகிய அமைப்புக்களின் ஊடாக கையளிக்கப்பட்டுள்ளது. (ச-19)

## பேருந்து மோதி இளைஞன் காயம்

முல்லைத்தீவு, பெப். 9

புதுக்குடியிருப்பு முள்ளிவாய்க்கால் வீதியில் இரட்டைவாய்க்கால் சந்திக்கு அண்மித்த பகுதியில் பேருந்து மோதி இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இந்த விபத்து நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்துக்குப் பின்னால், மோட்டார் சைக்கிளில் இளைஞர் பயணித்துக் கொண்டிருந்த போது, பேருந்து திடீரென தனது இயக்கத்தை நிறுத்தியதை அடுத்து குறித்த இளைஞர் பேருந்துடன் மோதுண்டார். விபத்தில் காயமடைந்த இளைஞர், மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-4-19)

## மரண அறிவித்தல்

மலர்வு:11.08.1965 உதிர்வு:08.02.2022

### அமரர் கந்தையா குணரத்தினம்

(பாடசாலை அலுவலக பணியாளர்,
யா/சரசாலை கமலாசினி வித்தியாலயம்)



மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணரத்தினம் நேற்று (08.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மட்டுவில் வடக்கு அமரர்கள் கந்தையா இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், மட்டுவில் வடக்கு அமரர் யோகநாதன் - விக்கினேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கோமதியின் அன்புக் கணவரும், வேணுசங்கர், டனிஸ்ரா, கஜசங்கர் (தரம் 11 மாணவன் சாவகச்சேரி, டிறிபேக் கல்லூரி). சஸ்மிரா (தரம் - 10 மாணவி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2022) புதன்கிழமை மட்டுவில் வடக்கு பனையடிப் பிள்ளையார் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11 மணிக்கு தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பனையடிப்பிள்ளையார் கோவில் வீதி,**
**மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர்,**
**கு.வேணுசங்கர் (மகன்)**
**0770 823 683**

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக சமுதாயஞ்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்

**செல்வி செல்வரத்தினம் மல்லிகாதேவி**



அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்வரத்தினம் பரமேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(cs 42816) (2.6)

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம், ஊர்காவற்துறை.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### பொன்னப்பா சுப்பிரமணியம்



தோற்றம் 15.02.1926 மறைவு 21.01.2021

கண்மூடித்திறப்பதற்குள்
ஆண்டு ஒன்று ஓடிவிட்டது
நேற்று நடந்தமாதிரியே உங்கள் பிரிவு
எங்களை வாட்டுகிறது
ஒரு நொடிப் பொழுதும் அழியவில்லை
உங்களுடைய நினைவுகள்
எங்கள் காலம் உள்ளவரை
நிலைத்திருக்கும்

உங்கள் நினைவுகளுடன் வாழும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(cs 18695) (2.7)

## மரண அறிவித்தல்



### ரஞ்சிதமணி சோமாஸ்கந்தகுருக்கள்

இணுவில் தெற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரஞ்சிதமணி சோமாஸ்கந்தகுருக்கள் அவர்கள் நேற்று (08.02.2022) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தீஸ்வரக்குருக்கள் சோமாஸ்கந்தகுருக்கள் (இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய பிரதமகுரு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராஜக்குருக்கள் ரங்கநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்தீஸ்வரக்குருக்கள் சாரதாம்பாள் தம்பதியின ரின் அன்பு மருமகளும், அரவிந்தக்குருக்கள் அபிராமி, சிவகாமி, பிரசன்னா குருக்கள், சுபநேமி ஆகியோரின் அன்புத் தாயாரும், கோ மாலினி, விசாகசர்மா, துஸ்யந்த சர்மா, ஜெயவாணி, சிவகுமாரக்குருக்கள் ஆகியோரின் அன்பு மாமியாரும். தேவசேனா, காலஞ்சென்றவர்களான உருத்திரமூர்த்தி குருக்கள், ரதிரூபா மற்றும் உபேந்திரக்குருக்கள், ராதாகிருஸ்ன குருக்கள், ராஜாராம் குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆராதனா, ஆரார்த்திகசர்மா, அபிஜிதசர்மா, சுபாங்கசர்மா, காலஞ்சென்ற சாரங்கன்சர்மா மற்றும் தேனுகா, மனசிகா, பிரத்யும்னசர்மா, சிவாத்மிகா, சிவானுயா, சிவாத்மஜசர்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**0777 435 015, 077 254 9709**
**பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வீதி,**
**இணுவில் தெற்கு, இணுவில்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 18604) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழா வாழ்த்து



**திருமதி தேவராணி**
**திருவாதவூரர் (SLTS -I)**

09.02.2022 இன்றைய தினம் மணிவிழா
காணும் எமது ஆசிரியை
அவர்களை சீரும் சிறப்பும் பெற்று
வாழ வாழ்த்துகின்றோம்.

யா/பிளவத்தை அ.மி.த.க.
பாடசாலை சமூகம்,
சித்தங்கேணி.

(cs.18692) (2.6)

## 4ஆம் ஆண்டு நீங்கா நினைவில்

மண்ணில் 16 . 06 . 1939

விண்ணில் 26 . 01 . 2018



**அமரர் திருமதி சாந்தநாயகி தணிகாசலம்**
**(நிறுவுனர் தனிகா நுண்கலைக் கல்லூரி)**

அம்மா
அன்புடன் எம்மை வளர்த்து
அறிவையும் பண்பையும் நிறைத்து
வளமான வாழ்க்கையை
வளமார உளமார வாழ்ந்திட
வாழ வைத்த அன்புத் தெய்வமே
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனது அம்மா
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் அம்மா
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எம்முடன் வாழ்வீர்கள் அம்மா...

183/5 (528), பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## யாழ்ப்பாணம்
## சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்தி சங்கம் (வ/து)

**பெண் எழுதுநர் தேவை**

1) பதவியின் பெயர் :- குறியீட்டு இல. எழுதுனர் 302-11
2) சம்பள அளவுத் திட்டம் :- 17190-170x10-185x10- 20740
3) அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :- கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் கணக்கு பதிவாளர் பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது அதே ஒத்த பதவியில் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

2) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும். அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் சம்பந்தமான துறையில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

3) கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திர உயர்தர சித்தி சான்றிதழ்/ அல்லது க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தக துறையில் 3 பாட சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் கடமைகளில் 2 வருடத்திற்கு குறைாத அனுபவம். கணினி அறிவு.
4) வயது :- 18-45 வரை
கூட்டுறவுச் சங்கப்பணியாளர் கடமையாற்றும் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்கவும். இவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது.
5) விண்ணப்ப முடிவுத் திகதி :- 23.02.2022
6) தெரிவு செய்யப்படும். பட்சத்தில் காசுப் பிணையினை செலுத்துவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
7) 1. சங்க எல்லைப் பரப்பில் 3 மைல்களுக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2.இச் சங்கத்தில் ரூபா.25/- செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப் பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
3. விண்ணப்பப்படிவத்துடன் கல்விச் சான்றிதழ். பிறப்புச் சான்றிதழ். அனுபவச் சான்றிதழ். வதிவிடச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதி என்பன இணைக்கப்படல் வேண்டும்.
8) விண்ணப்ப படிவங்கள் யாவும் செயலாளர். யாழ்ப்பாண சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம். போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதுநர். 302/11 பதவிக்கான விண்ணபம் என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு
சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்தி சங்கம்
போதனா வைத்தியசாலை.
யாழ்ப்பாணம்.

செயலாளர்
09.02.2022

## Vacancy for Audiologist
### Teaching Hospital, Jaffna.

Government General Hospital welfare society of Teaching Hospital, Jaffna invites applications from suitably qualified individuals to fill the vacancy of audiologist at Teaching hospital, Jaffna.

Send your applications to the office of the Government General Hospital Welfare Society, Teaching Hospital, Hospital Road, Jaffna by Gmail or post before 28th Feb 2022.

Gmail – thwelfaresociety@gmail.com

## மரண அறிவித்தல்

மண்ணில் மலர்வு 20 . 06 . 1950

விண்ணில் உதிர்வு 07 . 02 . 2022



**திருமதி இந்திராணி வடிவேல்**

யாழ். அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி வடிவேல் நேற்றுமுன்தினம் (07.02.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் - நேசமலர் தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்ற சுப்பையா (சண்டிலிப்பாய் வடக்கு) - ஞானலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும். சுப்பையா வடிவேல் அவர்களின் அன்பு மனைவியும். கலைவாணி (ஆசிரியை- ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்). திருக்குமரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்.சுதாகரன் (ஆசிரியர்- மகாஜனக் கல்லூரி). கிந்துஷா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அருணகிரிநாதன் (சுவிஸ்) மற்றும் தில்லைநாதன் (கனடா). யோகநாதன் (கனடா). பராசக்தி (சுவிஸ்). அருந்ததி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும். சிவானுஜா. அவந்திகா. அதுல்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் அளவெட்டி தம்மளை முள்ளான இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"வேல் வில்லா"**
**அளவெட்டி தெற்கு, அளவெட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 03 . 1941

மறைவு 07 . 02 . 2022



**திருமதி வயிரமுத்து - பாலாமணி**

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மாதனை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வயிரமுத்து பாலாமணி அவர்கள் கடந்த (07.02.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான கதிர்காமு அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும். அமரர்களான பஞ்சரத்தினம், சுசிலாதேவி (வவா) ஆகியோரின் அன்புச் சகோதரியும். அமரர் வயிரமுத்து அவர்களின் ஆருயிர் மனைவியும். கணேசராசா. அருள்மொழி. விக்னராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும். காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம். குமாரசாமி (குமாரர்) ஆகியோரின் பாசமிகு மருமகளும். சுரேந்திர ராசாவின் பெரிய தாயாரும். தயாநிதி. அமரர் சிவானந்தம். கவிதா. திருமகள். தவச்செல்வி. வானதி. ஜனனி ஆகியோரின் மாமியாரும், அரவிந்தன். கீர்த்திகா. வருண். வர்சிகா. கோபிகா. ஸ்ரீராம். நிருத்திகா. நிவேதா. கர்னிஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும். அமரர் குமாரசாமி மற்றும் சகுந்தலை. கார்த்திகேசு. கமலநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2022) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேசபதி, மாதனை,
பருத்தித்துறை.

(NE-18208) 1.6

குடும்பத்தினர்
கணேசராசா-076753 3956
அருள்மொழி - 076 925 3187
விக்னராசா - 077 642 3117


## தென்.கிழக்குப் பல்கலையில் பட்டமளிப்பு நிகழ்வு ஆரம்பம்



கொழும்பு, பெப். 9

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் நாளை 10ஆம் திகதிவரை இடம்பெறுகின்றது.

4 நாள்கள் இடம்பெறும் இந்தப் பட்டமளிப்பில் இரு அமர்வுகளாக 8 அமர்வுகள் இடம்பெறவுள்ளன. பட்டமளிப்பு விழாவில் 2ஆயிரத்து 621 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர். (ச-30)


### பணிப்பெண் தேவை

வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவைப்படுகிறது. தங்குமிட வசதிகளுடன்.

தொடர்பு: 077 400 5023

### பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்பு: 077 165 8524

### காணி விற்பனைக்கு

சரவணை கிழக்கு. சரவணையில்
13 பரப்பு தோட்டக்காணி
விற்பனைக்குண்டு.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

077 255 0807

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கட்டப்பிராயில்
அமைந்துள்ள வீடு வாடகைக்கு
விடப்படும்.

(ne18207) (2.6)

077 183 2404

### வேலையாள்கள் தேவை

பளையில் அமைந்துள்ள தென்னந்
தோட்டத்திற்கு வேலையாள்கள் தேவை.
உழவு இயந்திரம் இயக்கக்கூடியவர்கள்
விரும்பத்தக்கது.

(ne18206) (2.6)

077 183 2404

Home Visit - English Medium
One One One / Group
**English Lang - ANY GRADE**
Accounting, GEo, Citizen, History
Teacher Foreign Experienced

077 331 6402

### விற்பனையாளர் தேவை

திருநெல்வேலி பகுதியில் உள்ள எமது
லொத்தர் விற்பனை நிலையத்திற்கு
விற்பனையாளர் தேவை.

தொடர்பு: 077 078 2395

### வேலையாட்கள் தேவை

Lovely Flowers Center இன் கிளிநொச்சி மற்றும் நெல்லியடி கிளைகளுக்கான வேலையாட்கள் தேவைப்படுகின்றார்கள். ஆர்வம் உள்ளவர்களான தொடர்பு கொள்ளவும்.

(ஆண் மற்றும் பெண்)

தொடர்பு: 077 400 5023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Sri Mahakaliamman Devasthanam, Valaithoddam, Iyakkachchi Temple Trust*

## ஆலய நிர்வாக உத்தியோகத்தர்

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயத்துக்கு இந்து மதத்தை சேர்ந்த , ஆலய வழிபாடுகளில்ஈடுபாடுள்ள, சமூகசேவை மனப்பான்மையுள்ள நிர்வாக உத்தியோகத்தர் தேவை .

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆலயத்தை அறங்காவலர் சபையின் வழி காடடலுக்கேற்ப நிர்வகித்து நித்திய பூசைகளை குறிப்பிடட நேரத்திற்குநடாத்தி ஆலய உற்சவங்களையும், சிறப்பு பூசைகள் ஆகியவற்றையும் ஆகம முறைப்படி நடை பெறுவதை உறுதி செய்வதும் பிரதான கடமைகளாகும்.

ஆலய செயற்பாட்டுக்கு தேவையான முழு நிர்வாகத்தையும் பொறுப்புடன் எற்று செயற்படுவது இப் பதவிக்குதேர்ந்தெடுக்கபடும் நபரின் கடமையாகும்.

ஆலயத்தின் அண்மித்த பகுதியில் வாழும் மக்களின் சமய சமூக கல்வி மேம் பாட்டுக்கு உதவுவதும் இந்தநிலைக்குரிய பணியாகும்.

ஆலயம் அமைந்துள்ள அண்மித்த பகுதியிலிருந்து கிடைக்கும் விண்ணப்ப ங்களுக்கு முன்னுரிமைவழங்கப்படினும் , மற்றைய பிரதேசங்களிலிருந்து கிடைப்பவையும் சமமாக பரிசீலிக்கப்படும்.

ஆலயத்தோடு மிகுந்த ஈடுபாடுள்ள ,தேர்ந்தெடுக்கப்படும் நபருக்கு தகுந்த ஊதியமும் வழங்கப்படும் .

தொடர்பு கொள்ளவும் :
மின்னஞ்சல் : sr@isfindustries.com
தொலைபேசி : 0772078455
தபாலில் : 3/4 , Rockwood Place ,Colombo 07

QUICK ADS

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு

பிறப்பு 30.08.1923



இறப்பு 21.01.2021

அமரர் வீ.சரஸ்வதி

23ஆம் ஆண்டு

பிறப்பு 15.08.1923



இறப்பு 11.04.1998

அமரர் வே.வீரவாகு
(பொலிஸ் சாஜன்)

ஆறாத அன்பு கொண்ட அன்னையே தந்தையே
உங்களுடைய அன்பு, அறிவு ஆற்றல் தைரியம்
எங்களை என்றும் வழிநடத்தும்
எம்மைவிட்டு பிரிந்து ஒன்று என்ன நூறு ஆனாலும்
நீராய் பூத்த நினைவுகளாய் என்றும்
எங்கள் மனங்களில் உயிர்ப்பாய் வாழ்வீர்கள்

கோகுலம்,
இல.98, சண்டிலிப்பாய் வடக்கு.

(cs.18357) 2.6)

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
07
.
02
.
1943



இறப்பு
08
.
02
.
2022

### தம்பிப்பிள்ளை தர்மலிங்கம்

குப்பிளானை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் நேற்று (08.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற குயிலம்மாவின் பாசமிகு கணவரும், பிரபாகரனின் (சுவிஸ்) அன்புத் தந்தையும், அஞ்சலாவின் (சுவிஸ்) மாமனாரும், சாகித்தியன் (சுவிஸ்), அபினயா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான ராசா, கதிரமலை மற்றும் சிவஞானம், வடிவேலு (இலங்கை), சரோஜினி அம்மா (நெதர்லாந்து), இரகுநாதன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன் - பிரபாகரன்

(CS 18699)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
28
.
03
.
1955



மறைவு
10
.
01
.
2022

கடந்த (10.01.2022) திங்கட்கிழமை
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் வீரவாகு இரத்தினசிங்கம்
(ஆறாயிரம்)

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (09.02.2022) புதன்கிழமை முற்பகல் 11.மணியளவில் தண்ணீரூற்று கிழக்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் இரங்கல் உரையிலும், மலர் அஞ்சலி நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தண்ணீரூற்று கிழக்கு,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

(cs.18674) (2.6)

குடும்பத்தினர்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
28
.
09
.
1926



ஆண்டவன் அடியில்
14
.
01
.
2019

### அமரர் திருமதி தம்பு இராசமணி

**திதி: 09.02.2022**

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
அரவணைப்பில் சிகரமாய் என்றும் புன்னகைத்த முகத்துடன்
உற்றார் உவினர்க்கு என்றும் உதவிக் கரம் நீட்டி
தன் குடும்பத்தினர் எல்லோரினதும் சீர் சிறப்பிற்கும் வழிகாட்டி
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
உங்கள் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க
இறையருளை வேண்டி மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்.

மருதடிப் பிள்ளையார் கோவிலடி,
கச்சாய் றோட்,
கொடிகாமம்

(cr 7245 (2.6)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FLASH SALE

01 Week Only


Call Now

076 666 5267 / 021 430 0044

## Yarl Smart Water Solution (pvt) ltd.

3ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

## மாபெரும் விலைக்கழிவு!




நிலவும் குடிநீர் பிரச்சனைக்கு

நிரந்தரத் தீர்வு காண

இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள்!

~~38000/=~~

**29,999/=**

இச்சலுகை ஒரு வாரம் மட்டுமே

**YARL SMART** *Water Solution (Pvt) Ltd.*

*"Smart Water, Smart Life"*

No.341 K.K.S Road, Jaffna.

Karadippoku Junchtion Jaffna Road, Kilinochchi.

yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

# மணிவிழா வாழ்த்து



Congratulations!

யா/ நீர்வேலி றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன்

பாடசாலையின் ஆரம்பப் பிரிவு ஆசிரியராகக் கடமையாற்றி

**09.02.2022** அன்று ஓய்வுபெறும்

## திருமதி அகிலா சந்திரசேகரம்

(SLTS - I)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சேவை விபரம்:**

- யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் - 1988.08.17 - 1991. 02.04
- யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - 1991.02.05 - 1992.12.31
- யா/ நீர்வேலி றோ.க.த.க.பா - 1993.01.01 - 1993.02.28
- யா/ கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம் - 1993.03.01 - 1995.12.31
- வவு/ சி.சி.த.க.பாடசாலை - 1996.01.01 - 1997. 10.27
- யா/ கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம் - 1997.10.28 - 2013.12.31
- யா/ நீர்வேலி றோ.க.த.க.பா - 2014.01.01 - 2022.02.09

இவர் எமது பாடசாலைக்கு வழங்கிய சேவையைப் பாராட்டுவதோடு இவரது ஓய்வுக் காலம் சிறப்புற அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

**வாழ்த்துவோர்:**

**ஆசிரியர் கழகம், பழைய மாணவர் சங்கம்,**

**பாடசாலை அபிவிருத்திக் குழு.**

**யா/ நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை**

**நீர்வேலி.**

(ஊ.37534) (2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இருநாட்டு...

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகச் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் இலங்கை - இந்திய மீனவர் விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- பூகோள அரசியல் பிரச்சினை ஏற்படாத வகையிலும், கடல் வளங்களைப் பாதுகாக்கும் வகையிலும் கடந்த காலங்களில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஆயினும் அவ்வப்போது இந்தப் பிரச்சினை எழுவது வழமை. சில தரப்புகள் இதன்போது உணர்வுபூர்வமாகச் செயற்படலாம்.

இந்திய மற்றும் இலங்கைக் கடற்படைகள் அமைதியைக் காக்கும் வகையிலேயே இந்த விடயத்தில் செயற்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கின்றோம். எமது நாட்டுக்குரிய கடற்பரப்புக்குள் எமது மக்களுக்கு இருக்கும் உரிமைகளைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்-என்றார். (அ-எ-44)

## எகிறுகிறது...

களை பொதுமக்கள் சரியாகப் பின்பற்ற வேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஜனவரி மாத முற்பகுதியில் இருந்து கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது. தற்போது அனைத்துச் செயற்பாடுகளும் வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், கொரோனாத் தொற்று இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

பொதுமக்கள் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களைச் சரியான முறையில் பின்பற்ற வேண்டும். தேவையற்ற நடமாட்டங்கள் பயணங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். தடுப்பூசியை முறையாகப் பெற்றுக்கொள்வது தொடர்பில் சுகாதாரத் துறையினரால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் வீண் வதந்திகளை நம்பாது தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் டெங்குத் தொற்றும் அதிகரித்துள்ளது. புள்ளிவிவரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டம் டெங்கு அபாய வலயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் மலேரியா அபாயம் காணப்பட்டபோதும், தற்போது அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுமக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும்-என்றார்.(அ-எ-இ)

## கோப்...

படும் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவுக்கு (கோப் குழு) புதிய உறுப்பினர்கள் நேற்றுப் பெயரிடப்பட்டுள்ளன.

22 பேரை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள இந்தக் குழுவில் ஆளுங்கட்சி சார்பாக 14 பேரும், எதிரணியினர் சார்பாக 8 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்குப் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சிலம்பலாப்பிட்டிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள குழுக்களுக்கான உறுப்பினர் விவரங்களைப் பிரதிச் சபாநாயகர் வெளியிட்டார்.

மஹிந்த அமரவீர, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, சரத் வீரசேகர, ஜயந்த சமரவீர, டி.வீ. சானக்க, இந்திக்க அநுருத்த ஹேரத், நாலக கொடஹேவா, சுசில் பிரேமஜயந்த, ஜகத் புஷ்பகுமார, பிரமேநாத் தொலவத்த, மதுர விதானகே, சாகர காரியவசம், சரித ஹேரத் ஆகிய ஆளும்கட்சி உறுப்பினர்களும் - ரவூப் ஹக்கீம், அநுரகுமார திஸாநாயக்க, சம்பிக்க ரணவக்க, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, நளின் பண்டார, எஸ்.எம். மரிக்கார், இரா. சாணக்கியன் ஆகிய எதிரணி உறுப்பினர்களும் கோப் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோப் குழுவின் முதலாவது கூட்டத்தில் அந்தக் குழுவுக்கான புதிய தலைவர் நியமிக்கப்படுவார். இதுவரை கோப் குழுவின் தலைவராகச் செயற்பட்ட பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார் என்று அறிய முடிகின்றது. (அ-எ-44)

## எல்லைதாண்டி...

நெடுந்தீவுக்கு அருகே இலங்கைக் கடற்பரப்பில் வைத்து தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். தமிழக மீனவர்களின் 3 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தமிழகம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் மயிலிட்டி துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மலேரியா, கொரோனாப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தமிழக மீனவர்களை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தினர். மீனவர்கள் அனைவரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (அ-எ-26,20,23)

## கோபாவுக்கும்...

ரிடப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு பிரதி சபாநாயகர் ரஞ்சித் சிலம்பலாப்பிட்டிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்புவேளையின்போது கோபா குழுவுக்கான உறுப்பினர்கள் பெயரை அவர் அறிவித்தார்.

உதயகம்மன்பில, துமிந்த திஸாநாயக்க, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, செயான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர, திஸ்ஸ அத்தநாயக்க, திஸ்ஸ வித்தாரண, காதர் மஸ்தான், மொஹமட் முஸம்மில், உபுல் கலப்பதி, பி.வை.ஜி. ரத்னசேகர, வீரசுமன வீரசிங்க, ரஞ்சித் பண்டார ஆகிய ஆளுங்கட்சி உறுப்பினர்களும்-

ஹரின் பெர்னாண்டோ, நிரோஷன் பெரேரா, அசோக அபேசிங்க, புத்திக பத்திரண, சி.சிறீதரன், ஹேசா விதானகே, ஹரினி அமரசூரிய ஆகிய எதிரணியினரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கோபா குழுவின் தலைவராக செயற்பட்ட பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுக்கு மீண்டும் தலைமைப் பதவி வழங்கப்படலாம் எனத் தெரியவருகின்றது. (அ-எ-44)

## மினிபஸ்ஸுடன்...

வாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த இந்திரசிங்கம் நிருபன் (வயது-32) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மினிபஸ்ஸுடன் மோதுண்டு, விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் இந்த இளைஞர் பணி நிமித்தம் அதிகாலை பயணித்தபோதே விபத்தில் சிக்கியுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-26,125)

## இந்தியப்...

இருந்தும் பக்தர்கள் கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்க முடியும் - என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் மார்ச் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் நடைபெறவுள்ளது. சுகாதார நிலைமை மற்றும் கொரோனாத் தொற்று நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் 500 உள்ளூர் பக்தர்களை அனுமதிப்பதற்கான அனுமதியே சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து கிடைத்துள்ளது.

தற்போது இந்தியப் பக்தர்களையும் அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சு மற்றும் கலாசார அமைச்சுகளுக்கு இந்தக் கோரிக்கைகள் தொடர்பாகத் தெரியப்படுத்தியுள்ளோம். அதற்கு அனுமதி கிடைத்தால் இந்தியாவில் இருந்து பக்தர்கள் கலந்துகொள்ள முடியும் - என்றார். (அ-எ-26)

## ஓய்வூதியருக்கு...

றும் ஓய்வூதியம் பெறுவோருக்கான 5 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு இந்த மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனவரி மாதத்துக்கான விசேட கொடுப்பனவு நிலுவை பெப்ரவரி மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது என்று ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் ஜகத் டி.டயஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஓய்வூதியத்திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தில் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவரினதும் ஓய்வூதியப் பற்றுச்சீட்டில் தற்போது இதைப் பார்வையிட முடியும். புலம்பெயர் ஓய்வூதியம் பெறுவோர் தவிர அனைத்து அரச ஓய்வூதியம் பெறுவோரும் இந்தக் கொடுப்பனவை பெற உரித்துடையவர்களாவர். இந்தக் கொடுப்பனவின் மூலம் சுமார் ஆறு இலட்சம் ஓய்வூதியர்கள் நன்மை அடைவார்கள் - என்றார். (அ-எ-இ)

## தமிழக...

பட்ட படகுகள் நேற்றும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம், காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 135 படகுகள் ஏலத்தில் நேற்றுமுன்தினம் விற்பனை செய்யப்பட்ட நிலையில், காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 படகுகள், நேற்று ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து வந்த கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள தலைமையக அதிகாரிகள் குழு இந்த ஏல விற்பனையை நடத்தியது.

நீர்கொழும்பு, கொழும்பு, புத்தளம், மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள் ஏலத்தில் கலந்துகொண்டனர். (அ-எ-26)

## போராட்டம்...

தார உத்தியோகத்தர்கள் சம்மேளனத்துக்கும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கும் இடையே நேற்று நடந்த பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில், பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள முரண்பாடுகளுக்கான தீர்வு உட்பட 7 கோரிக்கைகளை முன்வைத்து, சுகாதாரத் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைக் கடந்த இரு நாள்களாக முன்னெடுத்து வருகின்றன. தாதியர் சேவை, முழு நேர மற்றும் இடைக்கால சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் இணைந்து 18 தொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. இந்தப் போராட்டம் காரணமாக பல மருத்துவமனைகளின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

தங்கள் கோரிக்கைகளுக்கு தீர்வு கோரி நேற்று தொழிற்சங்கங்கள் கொழும்பில் எதிர்ப்புப் பேரணி ஒன்றையும் நடத்தியிருந்தன. அந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் சுகாதார உத்தியோகத்தர்கள் சம்மேளனத்துக்கும் சுகாதார அமைச்சருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆயினும் அதில் எந்த இணக்கப்பாடும் எட்டப்படாத நிலையில், தீர்வு கிடைக்கும் வரையில் தங்கள் போராட்டம் தொடரும் என்று சுகாதாரத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (அ-எ-இ)

## மருந்துகளுக்கும்...

தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்கின்றோம். இந்தப் பிரச்சினைக்கு எதிர்வரும் நாள்களில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

இவ்வாறு ஒளடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தபோதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியா - சீனா ஆகிய நாடுகளின் கடன் உதவியுடன் மருந்துப் பொருள்களை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனூடாக எதிர்வரும் சில தினங்களில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

அன்டிஜென் பரிசோதனை தொகுதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் சில தினங்களில் 4 இலட்சம் அன்டிஜென் தொகுதிகள் நாட்டை வந்தடையவுள்ளன - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் தேசிய போராட்டத்தை இளையசந்ததி கையேற்க வேண்டும்

## வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.9**

**எமது இனத்தையும் நிலத்தையும் எமது பாரம்பரியத்தையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு. இதற்காக நாம் அனைவரும் கட்சி அரசியலை கடந்து தமிழராக ஒன்றுபட வேண்டும். எங்கள் இளைய சந்ததியினர் எமது இனத்தின் தற்போதைய நிலையை உணர்ந்து தமிழினத்தின் தேசியப் போராட்டத்தைக் கையேற்க வேண்டும். நாம் ஒரு தேசமாக எழுந்து நிற்கும் போதே எமது விடுதலை சாத்தியமாகும். இவ்வாறு தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான எழுச்சி போராட்டத்தின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான எழுச்சி போராட்டத்தின் ஒரு வருட பூர்த்தி நேற்றாகும். ஆயுதப்போராட்டம் மௌனித்த பின்னர் தமிழர் தாயகம் எங்கும் கொந்தளித்த மாபெரும் எழுச்சிப்போராட்டமாக சமகால வரலாற்றில் இது இடம்பிடித்திருந்தது. பல்வேறு அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் தமிழினமே தன்னெழுச்சியாக பொங்கியெழுந்து தமது நியாயமான கோரிக்கைகளான மரபு வழித் தாயகம், சுய நிர்ணய உரிமை, தமிழ்த்தேசியம் என்பவற்றையும் தமக்கான சர்வதேச நீதியையும் வலியுறுத்தி நின்ற நாள். நீதிமன்ற தடை உத்தரவுகள், அச்சுறுத்தல்கள், கல்வீச்சுகள் என பல்வேறு தடைகளையும் தாண்டி, அரசியல் பாகுபாடுகளை புறந்தள்ளி தமிழினமே ஒருமித்து எழுந்து நின்ற தருணம். பின்வரும் கோரிக்கைகளை இந்தப் போராட்டம் வலியுறுத்தி நின்றது.

நில அபகரிப்புகளும், பௌத்த சிங்கள மயமாக்கல்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், தமிழர் தாயகம் எங்கும் நிலைகொண்டிருக்கும் சிங்கள இராணுவம் உடனடியாக அகற்றப்படுவதுடன், இயல்பு நிலை ஏற்படுத்தப்படவேண்டும், தமிழர் தரப்பில் உருவாகும் விடுதலைக்கான தன்னெழுச்சியான அரசியல் வெளியை ஒடுக்குவதில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு குறியாகவே உள்ளது. இவ்வாறான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், தமிழ் பூர்வீக நிலங்களில் வனங்கள் அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான தமிழரின் வாழ்வாதாரங்களை அழிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகள் உடனடியாக மீளக் கையளிக்கப்பட வேண்டும், சிங்கள - பௌத்த அரசானது, தமிழர்களின் நினைவுத்தூபிகள், அடையாளங்களை அழிப்பதில் முனைப்பாகச் செயற்படுகின்றது. இந்தநடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுவதுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் போர் கைதிகள் மற்றும் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும், முஸ்லிம் சமூகத்தையும் அடக்கி ஆள முனைகின்றனர். இந்நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட்டு இஸ்லாமிய மக்களின் அடிப்படை மத உரிமை மதிக்கப்பட வேண்டும், மலையக தமிழ் மக்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படுவதுடன் அவர்கள் எதிர் நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

தமிழ் இனத்தின் மீது மேற்கோள்ளப்பட்ட, தொடர்ச்சியாக மேற்கோள்ளப்படுகின்ற இனவழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே தொடர்ச்சியாக போராடி வருகின்றோம். எமது போராட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்க தமிழ் மக்களின் அனைத்துத்தரப்பினரும், குறிப்பாக இளையோர்கள் மற்றும் மாணவர்கள் எம்மோடு கரம் கோர்க்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம். -என்றுள்ளது.

(எ-இ)



# சிறுவர் பூங்காவுக்குள் கடைகள் வேண்டாம்!

## கிண்ணியாவில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, பெப். 9

கிண்ணியா - கொழும்பு பிரதான வீதியின் பிரதேசசபைக்கு முன்னால் உள்ள சிறுவர் பூங்காவுக்குள் கடைத்தொகுதி அமைக்க வேண்டாம் என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் காலை பெற்றோர், இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சிறுவர் பூங்காவுக்குள் கடைத்தொகுதி அமைக்க வேண்டாம், சிறுவர் பூங்கா தேவை என்று நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அதே பகுதியில் அபிவிருத்திக்காக கட்டடமும் தேவை· சிறுவர் பூங்காவும் வேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத் தனர்.

இதன்போது, 'முடக்காதே முடக்காதே அபிவிருத்தியை முடக்காதே', 'அபிவிருத்தியில் அரசியல்வாதி தலையிடாதே', 'மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் சிறுவர் பூங்கா தேவை' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(ம-ரி1)

# ஹிட்லரைப் போன்றே கோத்தாவின் செயற்பாடு

## இரா. சாணக்கியன் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 9

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தற்போது ஹிட்லர் போலவே செயற்பட்டு வருகின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஹிட்லரின் காலத்தில் ஜேர்மனியில் எவ்வளவு மக்கள் மரணித்தாலும் பரவாயில்லை, தனக்கு தோன்றும் விடயங்களை அவர் செயற்படுத்தினார். ஆட்சிக்குவர முன்னர் அந்த நாட்டு மக்களுக்கு ஹிட்லர் உறுதிமொழிகளை வழங்கியிருந்தார். எமது நாட்டு ஜனாதிபதியும், நாட்டை மீட்பேன், தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் எனக்கூறியே ஆட்சிக்கு வந்தார். ஆனால் இன்று என்ன செய்கின்றார்? ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் குற்றமற்றவர்களாகக் கருதி விடுவிக்கப் படுகின்றனர்.

நாட்டில் இன்று பொருளாதாரப் போர் இடம்பெறுகின்றது. அந்தப் போரில் ஜனாதிபதி உட்பட பெரமுன தலைமையிலான அரசு தோல்வி கண்டுள்ளது. அன்று தோல்வி எனத் தெரிந்தும் ஹிட்லர் போர் செய்தார். மக்கள் கொல்லப்பட்டனர். பொருளாதாரப் போரில் தோல்வி கண்டுள்ள இந்த அரசு, மக்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் விதத்தில் செயற்படுகின்றது. உரிய வகையில் பொருளாதாரம் முகாமை செய்யப்படாததால் மக்கள் பஞ்சத்தில் மடியும் அபாயம் உள்ளது.

அதேவேளை, கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வடகொரியாவில் இருந்து ஆயுதம் கொள்வனவு செய்ததாக நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். வடகொரியா மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி அந்த நாட்டில் இருந்து ஆயுதம் வாங்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

பிரச்சினைகளை தீர்க்க சர்வசேதத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். நீதி அமைச்சர் அலி சப்ரி வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்வதால் மட்டும் சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட்டு விட முடியாது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இவ்வாறு திட்டத்தை ஆரம்பித்து வைப்பதால் மட்டும் எதுவும் நடக்கப்போவதில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஒரு லட்சம் பணத்துக்காக போராடவில்லை. தமது உறவுகளுக்காகவும், நீதிக்காகவுமே போராடுகின்றனர். அதே போல பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். தவறிழைக்காதவர்கள் கூட அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

(ம-4-44)

**English Classes**
Gr-1 to O/L
வீடு வந்து கற்பிக்கப்படும்.
Grammar and Syllabus
T.P: 077 3314 608

**வீடு வாடகைக்குத்தேவை**
வீதி ஒப்பந்தகாரருக்கு அலுவலகப் பாவனை மற்றும் வேலையாள்கள் தங்குவதற்கு மீசாலை, கொடிகாமம், சாவகச்சேரி, மந்துவில், வேம்பிராய் பகுதிகளில் வீடு தேவை.
074 069 2132

**வீடு வாடகைக்கு**
கச்சேரியில் யாழ். செயலகத்திற்கு ஒரு நிமிட நடை தூரத்தில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். மூன்று அறைகள், இரண்டு வரவேற்பறை, சமையலறை, Toilet அரச அல்லது தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 142 2846

**காணி விற்பனைக்கு**
ஊரெழு வடக்கு, பலாலி வீதி, வீரகத்திப் பிள்ளையார் கோவிலிருந்து 50 m தூரத்தில் அமைந்திருக்கும் 8 பரப்புக் காணி 2 பரப்பாக பிரித்து விற்கப்படும்.
076 940 1045

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.